17

THE MODERN

Tamil Third Reader

புதுமுறைத் தமிழ் மூன்ரும் பாடம்

BY

R. NARAYANASWAMI AYYAR

Asst. Model School, Government Training School

MADRAS

1928 [Price 3 As. 6 Ps.

THE REGISTRAR
11 APR 1928
MADRAS
TB
031,6(3)
M128
122982

THE MODERN

Tamil Third Reader

BY

R. NARAYANASWAMI AYYAR

Asst. Model School, Government Training School

MADRAS

OFFICE OF THE REGISTRAR OF ...
11 APR 1928
MADRAS

புதுமுறைத் தமிழ் மூன்றாம் பாடம்

(மூன்றாம் வகுப்பு)

ஆர். நாராயணஸ்வாமி அய்யர்

மாடல் ஸ்கூல் உபாத்தியாயர், கவர்ன்மெண்ட் ட்ரெயினிங் ஸ்கூல்

மதராஸ்

ரிஜிஸ்தர்செய்தது] 1928 [விலை 3 அணா 6 பை

172982

FOREWORD.

The author shows in the varied interesting and profitable lessons he has so wisely selected that he is thoroughly conversant with the subject matter suited to youngsters and the method suitable for educating the young.

The subject matter is so carefully provided that it might create in the pupils the thirst for knowledge and a taste for more reading. The teacher has the happy knack of expressing himself in language that pupils can comprehend.

The Readers are drawn up on true Educational lines. Information and inspiration lie in the various lessons. The pictures serve as valuable topics for easy composition lessons. A successful attempt is made to combine the teaching of Reading with that of Elementary Composition. Each Reader closes with a selection of maxims and morals running like a golden thread across the stream of Indian literature—the heritage of ages.

Pupils taken carefully through these Readers based on the concentric system will have obtained a good foundation which will help them in future studies.

In these days when everybody attempts Readers, we recommend, all teachers to at least see them and judge them for themselves.

Vellore,
21—1—28.

(Sd.) C. S. SUNDARAM,
District Educational Officer, North Arcot Dist.

TO

The Hon'ble Dr. P. SUBBARAYAN,

M.A., B.C.L., LL.D., M.L.C., Bar-at-law,

Chief Minister for Education and Local Self-Government,

GOVERNMENT OF MADRAS.

This Book

is most respectfully dedicated

with his kind permission.

1928

பொருள் அடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேகம்	5
2.	பூமிதேவி	7
3.	நாணயங்கள்	9
4.	உண்மை	11
5.	பூர்ணசந்திரன்	14
6.	கார்டும் கவரும்	16
7.	நக்ஷத்திரங்கள்	18
8.	புள்ளிமான்	20
9.	மாதங்கள்	22
10.	ஸ்ரீராமர்	24
11.	நீர்நிலைகள்	27
12.	தென்னம் பிள்ளை	30
13.	காற்று	32
14.	நிறுத்தல் அளவை	34
15.	நீரும் அதன் குணங்களும்	36
16.	குசேலர்	38
17.	கீழ்ப்படிதல்	41
18.	சீதையும் புள்ளிமானும்	42
19.	காசி நகரம்	45
20.	பொருள்கள்	46
21.	சண்டேசுவரர்	48
22.	நெல்	50
23.	நல்லொழுக்கம்	53
24.	நமது தாய் நாடு (இந்தியா)	54
25.	தீபாவளி	56
26.	நிலப் பாகங்கள்	58
27.	கண்ணும் பூச்சி	60
28.	பிரயாணம் செய்தல்	63
29.	விளக்குகள்	66
30.	படகுகளும் கப்பல்களும்	69
31.	தைரியமுள்ள சிறுவன்	71
32.	பழமொழிகள்	74
33.	ஆத்திசூடி	75
34.	கொன்றைவேந்தன்	77
35.	ஆத்திசூடி (பொருள்விளக்கம்)	78
36.	கொன்றைவேந்தன் (பொருள்விளக்கம்)	79



ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேகம்

நமது சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் என்று முன்பே நீங்கள் படித்திருக்கிறீர்கள். அவருடைய தந்தை எட்வர்ட் என்பவர். அவர் சுமார் பத்து வருஷகாலம் அரசாண்டு வந்து, 1910-௵ மே-௴ காலம் சென்றார். அதுவரையில்

இளவரசராய் இருந்து வந்த நமது ஜார்ஜ் மன்னர், 1911-ஞூ ஜூன்-மீ 2-உ இங்கிலாந்தில் பட்டம் கட்டிக்கொண்டார்.

நமது மன்னருக்குத் தமது இந்தியப் பிரஜை களிடம் அன்பு அதிகம். அவர் இளவரசரா யிருந்த போது ஒரு முறை இந்தியாவுக்கு வந்திருந் தார். மற்றொரு முறை, அவர் டெல்லிமா நகரத்தில் 1911-ஞூ டிஸெம்பர்-மீ 12-உ முடிசூட்டிக் கொள்வதற்காக இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

அந்த டெல்லிமா நகரிலே பட்டாபிஷேகத் திற்கென்று வெகு அழகான மண்டபம் ஒன்று கட்டப்பட்டது. சிற்றரசர்களும், பிரபுக்களும் தங்கத்தக்க விடுதிகள் அனேகம் அமைக்கப் பட்டன. இந்தியாவிலுள்ள பல கனதனவான் களும் அங்கே கூடினர். சிங்கக் கொடிகள் ஆகா யத்தில் அசைந்தாடின.

சுப முகூர்த்தத்திலே அரசரும் அரசியாரும் அக்கொலு மண்டபத்திற்கு வந்தனர். சுதேச அரசர்களும் இராஜாங்க உத்தியோகஸ்தர்களும் இராணுவ வீரர்களும் வரிசை வரிசையாய் விளங்கி னர். அப்போது ஜார்ஜ் மகிபருக்கும் மேரி ராணி யாருக்கும் மகுடாபிஷேகம் வெகு சிறப்புடன் நடைபெற்றது. எங்குப் பார்த்தாலும் "மன்னர்

நீடூழி வாழ்க'', "செங்கோல் ஓங்குக'' என்ற, வாழ்த்து ஒலிகளே நிரம்பின. நூற்றொரு வெடிக் குண்டுகள் அப்போது வெடிக்கப்பட்டன.

பின்பு சக்கரவர்த்தி எழுந்து, இந்திய ஜனங் களிடத்தில் தாம் மிக்க அன்புள்ளதாகவும், அவர் களை நீதியாகத் தாம் ஆள்வதாகவும் கூறினர். "இன்று முதல் இந்தியாவுக்கு டெல்லி நகரமே இராஜதானி ஆகுக'' என்றும் அவர் உரைத்தார்.

அம்முடி சூட்டு நாளின் அறிகுறியாக, ஒவ் வொரு வருஷத்திலும் டிஸெம்பர்-மீ 12-உ பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை வழங்குவதுண்டு. அன்று, சிறு பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் சிற்றுண்டிகள் அளிப்பது வழக்கம்.

---

2. பூமிதேவி

பூமிதேவியே நமக்கெல்லாம் தாய். அவள் மகாவிஷ்ணுவின் மனைவி. அவள் நம்மைத் தனது மடியிலேயே வைத்து வளர்த்து வருகிருள். நமக்கு வேண்டிய ஆகாரப் பொருள்கள், வஸ்திரங் கள், வாகனங்கள், வீடுகள் முதலிய யாவற்றையும் அவ்வன்னையே நமக்கு அளிக்கின்ருள். அவள் மேலே உலவும் காற்று நமக்குப் பிராணுதார மாகின்

றது. அவள் சரீரத்தில் வளரும் செடிகளும், கொடிகளும், மரங்களும் நமக்கு இனிய உணவை அளிக்கின்றன. அவள் அளிக்கும் நீரை நாம் உட்கொள்ளுகிறோம். அவள், நம் பொருட்டுப் பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் நவரத்தினங்களையும் தன்னுள் வைத்திருக்கிறாள். அவளினும் மேலான தாய் நமக்குண்டோ?

பொறுமையிற் சிறந்தவள் பூமிதேவியே என்பர் பெரியோர். அவள் மேல் எவ்வளவு பாரமான மலைகள் இருக்கின்றன! அதனால் அவள் வருந்துகிறாளோ? இல்லை. பூமி தேவி, தன்னை ஆழமாக வெட்டுகின்றவனுக்கும் தங்க இடம் கொடுக்கின்றாள். தனது பிள்ளைகள் தன்னை அலக்ஷியம் செய்தாலும் அவள் அவர்களைக் கைவிடுவதில்லை. தன்னை நம்பிப் பாடுபடுகிறவர்களை அவள் ஒரு பொழுதும் மறப்பதில்லை. ஒன்றுக்கு நூறாகவே அவள் உதவுகின்றாள்.

அந்த அன்னைக்கு நாம் செய்யவேண்டுவது என்ன? நாம் அத்தேவியை மனமார எப்பொழுதும் வணங்க வேண்டும். அவள் வயிற்றில் பிறந்த எல்லா ஜீவராசிகளிடமும் நாம் அன்பு பாராட்ட வேண்டும். நாம் எல்லோரும் ஒத்து வாழவேண்டும் என்பதே நமது தாயின் விருப்பம்.

3. நாணயங்கள்

இது ஒரு ரூபாயின் உருவம். ரூபாய் வெள்ளியால் ஆனது. ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணாக்கள்.

இது அரை ரூபாயின் படம். இதுவும் ஒரு வெள்ளி நாணயம். அரை ரூபாய்க்கு அணாக்கள் எட்டு.

கால் ரூபாய்க்கு அணாக்கள் நான்கு. கால் ரூபாய் வெள்ளியிலும் நிக்கலிலும் உண்டு.

அரைக்கால் ரூபாய்க்கு அணாக்கள் இரண்டு.

இரண்டணா நாணயங்களிலும் இரண்டு விதங்கள் இருக்கின்றன. சதுரமாய் இருப்பது நிக்கல் நாணயம்; வட்டமாய் இருப்பது வெள்ளி நாணயம்.

பன்னிரண்டு பைகள் சேர்ந்தது ஒரு அணா. இதுவும் நிக்கல் நாணயமே. அணாவில் எத்தனை வளைவுகள் இருக்கின்றன பார்.

அரையணா, காலணா, பை (தம்படி) இவை செம்பு நாணயங்கள்.

பவுன் என்பது தங்க நாணயம். பவுன்களை உருக்கி நகைகள் செய்வது உண்டு. பவுனின் ஒரு பக்கத்தில் குதிரை உருவமும், மற்றொரு பக்கத்தில் அரசர் தலையின் உருவமும் பதித்திருக்கும். இதைத் தவிர அரைப் பவுனும் உண்டு. பவுனை ஸாவரன் என்றும் சொல்வார்கள்.

தங்கம், வெள்ளி, செம்பு இவைகளுக்கு உலோகங்கள் என்று பெயர். உலோகங்கள் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. உலோகங்களை உருக்கி, வேண்டியபடி நாணயங்

களாக அடிக்கிறார்கள். நிக்கல் என்பது கலவை உலோகம். நாணயங்களின் ஒரு புறத்தில் அரசர் தலையின் உருவம் பதித்திருக்கும்; மற்றொரு புறத்தில் அவற்றின் மதிப்பும் அவை செய்யப் பட்ட வருஷமும் காணப்படும்.

உலோகங்களைத் தவிர, காகிதத்திலும் அரசர் தலையின் உருவம், பணத்தின் பெறுமானம் இவை களை அச்சடித்து, அதை நாணயங்களுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். அது "நோட்" என்று சொல்லப்படும். நோட்டுக்கள் ஐந்து ரூபாய் முதல் பதினாயிரம் ரூபாய் வரையில் இருக் கின்றன. நாணயங்களையும் நோட்டுக்களையும் கொடுத்து, நமக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொள்ளலாம்.

'பணமுள்ளவன் பெரியவன்,'
'பணமில்லாதவன் பிணம்.'

---

4. உண்மை

நடராஜன் என்னும் சிறுவன் ஒரு நாள் மாலை யில் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து, "அப்பா! புது முறைத் தமிழ் மூன்றும் பாட புத்தகம் காணா மற் போயிற்று; புதுப் புத்தகம் வாங்கவேண்டும்; மூன்றரை அணா கொடுங்கள்" என்றான். தகப்பனார் மூன்றரை அணாவைக் கொடுத்து, "புத்த கத்தை வாங்கிக்கொண்டு, அதை இனியேனும்

ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்" என்று சொன்னார்.

நடராஜன் பணத்தை எடுத்துக்கொண்டு புத்தகக் கடைக்குப் போய் "ஐயா! புதுமுறைத் தமிழ் மூன்றும் பாட புத்தகம் ஒன்று கொடுங்கள்" என்றான். கடைக்காரன் அப்புத்தகத்தைக் கொடுக்க, அதை வாங்கிச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நாழிகைக் கெல்லாம் அவன் பணம் கொடுக்க மறந்து, வீடு நோக்கிச் சென்றான். கடைக்காரனும் வேலை மிகுதியால் இதைக் கவனியாமல் இருந்து விட்டான்.

நடராஜன் வெகுதூரம் சென்றதும், தற்செயலாய்ச் சட்டைப் பையில் கையிட்டான். அப்பொழுது புத்தகத்துக்காகக் கொடுக்க வேண்டிய பணம் அதில் இருந்தது. அந்தச் சமயம், அப்பணத்தைக் கடைக்காரனுக்குக் கொடுக்க மனம் இல்லாமல், தான் ஏதேனும் அதற்குப் பக்ஷணம் வாங்கிச் சாப்பிடலாம் என நினைத்தான்.

பையன் வீடு சேர்ந்ததும் நடந்த செய்திகள் அனைத்தையும் தன் தாயினிடம் சொன்னான். உடனே அவள் "அப்பா! நடராஜா! என்ன காரியம் செய்தாய்! ஏமாற்றுவது, பொய் சொல்வது முதலியவை கெட்ட குணங்கள். நீ செய்யும் காரியங்கள் ஒருவருக்கும் தெரியாதிருந்தாலும், அவை கடவுளுக்குத் தெரியும்; அவர் எங்கும் நிறைந்தவர்"

என்று உபாத்தியாயர் சொன்னதாக நீ முன்னமே என்னிடம் சொல்லி யிருக்கிருய். உன் தகப்பனும் உனக்கு அனேக தடவைகளில் நல்ல புத்தி சொல்லியிருக்கிரூர் அல்லவா ? ஞாபகப்படுத்திப் பார். நீ செய்த காரியம் சரியல்ல" என்று சொன்ஞள்.

அதைக் கேட்டு நடராஜன் "அம்மா! தெரியாமல் செய்து விட்டேன்; மன்னிக்கவேண்டும். இப்போதே ஓடிப்போய்க் கடைக்காரனிடம் புத்தகப் பணத்தைக் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிக் கடையை நோக்கி ஓடினன்.

கடைக்காரனிடம் வந்ததும் நடராஜன், தான் பணம் கொடுக்க மறந்து விட்டதாகவும், அதற்காகத் தன்னை மன்னிக்கவேண்டு மென்றும் சொல்லிப் புத்தகத்தையும் காட்டி மூன்றரை அணுவைக் கொடுத்தான். கடைக்காரன் பையனுடைய நல்ல குணத்திற்கு மெச்சி, "குழந்தாய்! நீ ஏமாற்ருமல் உண்மையே பேசிப் பணத்தைக் கொண்டுவந்து கொடுத்தாய்; நீ மிகவும் நல்லவன்; ஆகையால் நீ கொண்ட புத்தகத்திற்குப் பணம் வேண்டாம். அதை நீயே எடுத்துக்கொள்" என்று சொல்லி அவனைச் சந்தோஷப்படுத்தி வீட்டுக்கு அனுப்பினன். புத்தகம் வாங்கவந்த சிறுவர் அனேகர் அவன் குணத்தைக் கொண்டாடினர்.

சத்தியமே உத்தமம்.



5. பூர்ண சந்திரன்

இப்படத்தில் பூர்ண சந்திரனைப்பார். இரவில் பூர்ண சந்திரன் வானத்தில் எவ்வளவு அழகாய்ப் பிரகாசிக்கிறது! அதனுடன் நக்ஷத்திரங்களும் பிரகாசித்துக்கொண்டு இருக்கின்றன. சந்திர வெளிச்சத்திற்கு நிலா என்று பெயர்.

நிலா, நமக்குக் குளிர்ச்சியையும் சந்தோஷத்தையும் தருகிறது. பிள்ளைகள் நிலாவில் விளையாடுவதற்குப் பிரியப்படுவார்கள். பிரயாணிகள் நிலாக் காலங்களில் உல்லாசமாக ஊர்வழி நடப்பார்கள்.

சந்திரன் பூர்ணமாகத் தோன்றும் தினம் பௌர்ணமி எனப்படும். அதற்கு அடுத்த நாள்

முதல் சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்ந்து வருகிறது. சந்திரன் தேய்ந்துவரும் பதினைந்து நாட்களுக்குத் தேய்பிறை அல்லது கிருஷ்ண பக்ஷம் என்று பெயர். அப்பக்ஷத்தின் கடைசி நாள் அமாவாசை எனப்படும். அமாவாசை இரவில் சந்திரனை காணப்படுவதில்லை. அன்று இருட்டு அதிகம்.

மறுநாள் முதல் சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாய் வளருகிறது. பதினைந்தாவது நாளில் அது முன்போலவே பூர்ணசந்திரன் ஆகிறது. அந்நாட்களுக்கு வளர்பிறை அல்லது சுக்கில பக்ஷம் என்று பெயர். பக்ஷத்தின் நாட்கள் திதிகள் எனப்படும்.

திதிகளாவன :—

பிரதமை	நவமி
துவிதியை	தசமி
திருதியை	ஏகாதசி
சதுர்த்தி	துவாதசி
பஞ்சமி	திரயோதசி
ஷஷ்டி	சதுர்த்தசி
ஸப்தமி	பௌர்ணமி அல்லது
அஷ்டமி	அமாவாசை

6. கார்டும் கவரும்

முன் காலத்தில் மனிதர், வெளியூரிலிருக்கும் நண்பர் உறவினர் முதலியவர்களுக்கு ஆள் மூலமாக வோ, ஓலை எழுதி அனுப்பியோ, செய்திகளைத் தெரிவித்துக்கொண்டு வந்தார்கள். அவற்ருல் பணச்செலவும், கால தாமதமும், சரீரக் கஷ்டங் களும் அதிகமாய் ஏற்பட்டன. இப்பொழுதோ அவ்வித கஷ்டங்களை நீக்க நமது இராஜாங்கத்தார் தபால் சாலைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். அவற் ருல் வெகு சீக்கிரமாயும் சொற்ப செலவிலும் செய்திகளை அறிந்துகொள்ளுகிருேம்.

செய்திகளை எழுதித் தெரிவிக்கும்படியான அட்டைக் காகிதத்திற்குக் 'கார்டு' என்று பெயர். கார்டுகளில் பதில் எழுதித் தெரிவிக்கக்கூடிய இரட் டைக் கார்டுகளும் இருக்கின்றன. அவை ஆங்கிலத் தில் 'ரிப்ளை கார்டு' எனப் பெயர் பெறும். கார்டில் இரண்டு பக்கங்கள் உண்டு. அவற்றுள் ஒரு பக்கத் தில் நடுப் பாதியில் கோடு ஒன்று காணப்படுகிறது. கோட்டின் வலதுபுறம், மேல்விலாசம் எழுதும் இடம். அதில் அரசர் தலையின் உருவமும் கார்டின் மதிப்பும் (அரையணு) அச்சிட்டிருக்கின்றன. கோட்டிற்கு இடதுபுறத்திலும், ஒன்றும் அச்சிடப் படாத மற்றைப் பக்கத்திலும் நாம் சமாசாரங்களை எழுதலாம்.

விலாசம் எழுதப்படும் பக்கத்தின் தலைப்பில் 'இந்தியா போஸ்டு கார்டு' என்றும், ஆங்கிலேய ருக்குரிய சிங்கக்கொடிப் படமும் அச்சிட்டிருக் கின்றன. இக்கார்டுகளை நமது தேசத்திலுள்ள வர்களுக்குத்தான் எழுதி அனுப்பலாம். அன்னிய நாடுகளுக்கு இந்தியா கார்டுகள் உபயோகப் படா. அவைகளுக் கென்று தனிக் கார்டுகள் உண்டு.

இந்தியா தபால் கார்டின் நீளம் ஐந்தரை அங்குலம்; அகலம் மூன்றரை அங்குலம். அதே அளவுள்ள வேறு அட்டைக் காகிதத்திலும் செய்திகள் எழுதி அனுப்பலாம். ஆனால் அதில் அரையணாத் தலைச்சீட்டு வாங்கி ஒட்ட வேண்டும்.

கார்டில் உள்ள செய்திகளைப் பிறர் பார்த்தல் கூடும். செய்திகளைப் பிறர் பாராமல் இருக்கவேண்டு மென்றாலும், அதிக செய்திகளை எழுத வேண்டி யிருந்தாலும், தனிக் காகிதத்தில் அவைகளை எழுதி உறையில் இட்டு ஒட்டி அனுப்பலாம். அந்த உறைக்குக் 'கவர்' என்று பெயர். கவரின் எடை, இரண்டரை ரூபாய் நிறைக்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும். கவரிலும், இராஜாவின் தலையும் அதன் மதிப்பும் (ஒரு அணா) அச்சிட்டிருக்கும். கவரின்மேலே மேல்விலாசம் எழுதவேண்டும். தபால் கவர் அல்லாத வேறு கவரிலும் ஒரு அணாத் தலைச்சீட்டு ஒட்டிச் சமாசாரங்களைத் தெரிவிக்கலாம்.

7. நக்ஷத்திரங்கள்

இன்றிரவு பூர்ண சந்திரன் வானத்தில் பிரகாசிக்கிறது. நாம் வேடிக்கையாக வெளியிற் செல்வோம் வாருங்கள். சந்திரன் எவ்வளவு அழகாயும் குளிர்ச்சியாயும் இருக்கிறது பாருங்கள்! அதனுடன் புள்ளி புள்ளிகளாய் அனேகம் காணப்படுகின்றனவே! அவை யாவை? அவைகள்தாம் நக்ஷத்திரங்கள். ஆகாயம் மப்பு மந்தாரம் இல்லாமல் இருப்பதால் அவைகள் தெளிவாகத் தெரிகின்றன. அவைகளில் சில பெரியவை, சில சிறியவை; சில கூட்டமாயும், சில தனித்தும் இருக்கின்றன.

அவைகளுக்கெல்லாம் அரசன் போலச் சந்திரன் நடுவில் ஒளியுடன் விளங்குகிறது.

நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் வெகு தூரத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு நக்ஷத்திரமும் நமது பூமியைவிட மிகப் பெரியது. சில நக்ஷத்திரங்கள் சூரியனைவிட எவ்வளவோ பெரியவை. அவை சூரியனைப் போலவே தம் இடம் விட்டு நகர்வதில்லை. ஆனால் பார்வைக்கு அவை நகர்வன போலத் தோன்றும்.

நக்ஷத்திரங்களில் இருபத்தேழு முக்கியமானவை. நக்ஷத்திரங்கள் ஏன் பகலில் தெரிவதில்லை? சூரிய ஒளி மிகுந்து இருப்பதால் அன்றோ? இன்றைக்கு என்ன நக்ஷத்திரம் தெரியுமா?

அசுவினி	பூசம்	ஸ்வாதி	திருவோணம்
பரணி	ஆயில்யம்	விசாகம்	அவிட்டம்
கிருத்திகை	மகம்	அனுஷம்	சதயம்
ரோகிணி	பூரம்	கேட்டை	பூரட்டாதி
மிருகசீரிஷம்	உத்திரம்	மூலம்	உத்திரட்டாதி
திருவாதிரை	ஹஸ்தம்	பூராடம்	ரேவதி
புனர்பூசம்	சித்திரை	உத்திராடம்	

“ஆயிரம் நக்ஷத்திரம் ஒரு சந்திரனாமோ?”

8. புள்ளி மான்

மான் இனத்தில் பலவகை உண்டு. அவை களுள் புள்ளி மானே மிக அழகானது. அதன் உடல், மெல்லியதாயும் பளபளப்பாயும் இருக்கும். அதன் மேலுள்ள உரோமம் பழுப்பும் சிவப்பும் கலந்த மங்கல் நிறம். அதன் நடுமுதுகில் ஒரு கரிய கோடும், உடல் முழுமையும் வெள்ளைப் புள்ளி களும் அமைந்திருக்கின்றன. அதற்குக் கொம்பு கள் உண்டு. அவை பார்ப்பதற்கு அழகாய் இருக்கும்.

மான் கொம்புகள் பல கிளைகளாகப் பிரிந்து வளரும்; ஆடுமாடு முதலிய மிருகங்களுக்கோ அப்படி வளர்வது இல்லை. மாட்டின் கொம்பை வெட்டிப் பார்த்தால் அதன் உள்ளே துவாரம்

இருக்கும். மேலும் மாட்டின் கொம்பு வளர்வதற்கு வெகு நாட்கள் செல்லும். மான் குட்டிகள் பிறந்த ஐந்தாறு மாதங்களுக்குள் அவற்றின் கொம்புகள் நன்ருக வளர்ந்து விடுகின்றன. அவைகள், உள்ளே துவார மின்றிக் கெட்டியாய் இருக்கும்.

மான்கள் தமது விரோதிகளைக் கண்டால் வெகு வேகமாய் ஓடும். ஓடுவதற் கென்றே கடவுள் அவைகளுக்கு மெல்லிய கால்களையும் ஒல்லிய உடலையும் அமைத்திருக்கின்ருர். தம் இனத்தோடு சண்டை செய்யும்போது மான்கள் கொம்புகளால் முட்டிக்கொள்ளுகின்றன. அப்போது அக் கொம்புகள் ஒன்ருேடொன்று சிக்கிக்கொண்டு விடுவித்துக் கொள்ள முடியாமல் இரண்டும் சாவதுண்டு.

ஆடு மாடுகளைப்போல மானும் இரட்டைக் குளம்புள்ள பிராணி. அவைகளைப் போல அதுவும் தீனியை அசை போட்டுத் தின்கின்றது. மான் புல் பூண்டுகளையே மேயும். அது வெகு சாதுவான மிருகம். அதன் விழிகள் மிக அழகுள்ளவை. சிறிய சத்தத்தைக் கேட்டாலும் அது வெருண்டு ஓடும். சிலர் மான் வேட்டை ஆடுவது உண்டு.

மான் தோலைப் பதப்படுத்தி, அதை ஆசன மாகவும் படுக்கையாகவும் உபயோகிக்கிருர்கள்.

அதன் கொம்புகளை அலங்காரமாகச் சுவர்களில் மாட்டிவைப்பார்கள். மான் கொம்பு வைத்திய முறையில் ஒளஷதமாக உபயோகப்படுவதும் உண்டு.

---

9. மாதங்கள்

ஆங்கிலேயருக்கும் நமக்கும் மாதங்களின் பெயர்கள் வேறுபட்டிருக்கின்றன. இங்கிலீஷ் மாதங்களாவன :—ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, ஸெப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிஸெம்பர். தமிழ் மாதங்களாவன :—சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி.

இங்கிலீஷ் மாதங்களில் ஏப்ரல், ஜூன், ஸெப்டெம்பர், நவம்பர் இந்நான்கு மாதங்களுக்கும், மாதம் ஒன்றுக்கு முப்பது நாட்கள். ஜனவரி, மார்ச்சு, மே, ஜூலை, ஆகஸ்டு, அக்டோபர், டிஸெம்பர் இவ்வேழு மாதங்களுக்கும், மாதம் ஒன்றுக்கு நாட்கள் முப்பத்தொன்று. பிப்ரவரி மாதத்திற்கு இருபத்தெட்டு நாட்கள். சில வருஷங்களில் அம்மாதத்திற்கு இருபத்தொன்பது நாட்களும் வரும்.

ஜனவரி மாதம் முதல் தேதி ஜனவரிப் பண்டிகை. இதைக் கிறிஸ்தவ மதத்தினர் அனைவரும் கொண்டாடுகின்றனர். அன்றைத் தினம் இங்கிலீஷ் வருஷப் பிறப்பு. ஏப்ரல் மாதம் 'ஈஸ்டர்' பண்டிகை வருகிறது. மே மாதத்தில் பள்ளிக் கூடங்களுக்குக் கோடைக்கால விடுமுறை விடுகிறார்கள். ஸெப்டெம்பர், அக்டோபர் மாதங்களில் 'மைகல்மஸ்' பண்டிகை. டிஸெம்பர் மாதம் கடைசி வாரம் 'கிறிஸ்தமஸ்' பண்டிகை. அப்போது பள்ளிக்கூடங்களுக்கும் ஆபீஸ்களுக்கும் விடுமுறை விடப்படும்.

சித்திரை மாதம் முதல் தேதி தமிழ் வருஷப் பிறப்பு. சித்திரை வைகாசி மாதங்களில் அனேக ஆலயங்களில் விசேஷ உற்சவங்கள் நடக்கும். இம்மாதங்களில் தான் அனேக கல்யாணங்கள் நடை பெறுவதுண்டு. ஆவணியில் விநாயக சதுர்த்தியும் கிருஷ்ண ஜயந்தியும் வரும். புரட்டாசி மாதத்தில் நவராத்திரி உற்சவம். ஐப்பசி மாதத்தில் தீபாவளிப் பண்டிகை. கார்த்திகையில் அண்ணாமலைத் தீபம். மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசியும், தை மாதத்தில் முதல் தேதியன்று சங்கராந்திப் பண்டிகையும் வருகின்றன.

10. ஸ்ரீ ராமர்

வட இந்தியாவில் அயோத்தி என்னும் நகரத்தில், தசரதர் என்று ஒரு சக்கரவர்த்தி உலகத்தை நீதியாய் ஆண்டு வந்தார். அவருக்கு நான்கு குமாரர்கள் பிறந்தனர். அவர்கள் இராமர், பரதர், லக்ஷ்மணர், சத்ருக்கினர் எனப்படுவர்.

அவர்கள் எல்லோரும் நன்ருகப் படித்தவர்கள்; அழகு வாய்ந்தவர்கள்; வில் வித்தையிலும் வலிமையிலும் சிறந்தவர்கள்; எல்லாரிடமும் அன்பு உள்ளவர்கள். இராமரது மனைவிக்குச் சீதை என்று பெயர். அவள் நற்குணத்திலும் அழகிலும் சிறந்தவள்.

பெற்ருேர் கட்டளைப்படி இராமர் பதினுன்கு வருஷம் காட்டில் இருக்க நேர்ந்தது. அப்போது சீதையும் லக்ஷ்மணரும் அவருடன் சென்றனர். வனத்தில் உள்ள ரிஷிகளும் பெரியோர்களும் அவர்களிடம் மிகவும் அன்பாக இருந்தார்கள்.

அந்தக் காட்டில் அனேக துஷ்டர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் இராக்ஷதர்கள் எனப்படுவர். அவர்கள் ரிஷிகளை இம்சித்துக் கொன்று வந்தார்கள். ஆதலால் இராமர் அந்த இராக்ஷதர்களை யெல்லாம் கொன்ருர்.

இராக்ஷதர்களுக்கெல்லாம் அரசன் இராவணன். அவனது தேசம் இலங்கை. அது

இந்தியாவின் தெற்குச் சமுத்திரத்திலுள்ள ஒரு தீவு. இராவணன் மிகுந்த பலவான்; துஷ்டன். ஒரு நாள் அவன், இராமர் இல்லாத சமயத்தில் சீதையினிடம் வந்து, அவளைத் தூக்கித் தன் தேரின் மேல் வைத்துக்கொண்டு போய்விட்டான்.

இராமரும் அவர் தம்பியும், மலை வனம் முதலிய இடங்களில் எல்லாம் சீதையைத் தேடினார்கள். அப்போது குரங்குகளுக்கு அரசனான சுக்கிரீவன் என்பவன் இராமருக்கு நண்பனானான். அவனுடைய மந்திரியின் பெயர் அனுமான். அனுமான், கல்வியிலும் அறிவிலும் சிறந்தவன்; வீரமும் பலமும் உள்ளவன். அவன் சுக்கிரீவன் கட்டளைப்படி சீதையைத் தேடிக் கண்டு பிடித்தான்.

இச்செய்தியை அனுமான் இராமருக்குச் சொல்லவே, இராமர் மிகவும் சந்தோஷம் கொண்டார். பிறகு அவர் வானர சேனையுடனே இலங்கைக்குச் சென்றார். கடலைக் கடந்தே இலங்கைக்குப் போகவேண்டியிருந்ததால், குரங்குகள் கடலின் மேல் ஒரு அணையைக் கட்டின. இராமர் வானர சேனைகளுடன் இலங்கைக்குச் சென்று, இராவணனையும் அவன் சேனைகளையும் கொன்றார்.

பிறகு இராமர் சீதையையும், மற்றுமுள்ள வானர சேனைகளையும் அழைத்துக்கொண்டு அயோத்திக்குத் திரும்பிப் போனார். அங்கே

அவருக்கு வெகு சிறப்புடன் பட்டாபிஷேகம் நடந்தது. அன்றுமுதல் அவர் அயோத்திக்கு அரசரானர்.

11. நீர் நிலைகள்

இது ஒரு கிணற்றின் படம். ஒருவன் கிணற்றிலிருந்து இராட்டினத்தின் உதவியால் நீர் இழுக்கிருன்.

கிணறு, குளம், ஏரி, ஆறு, கடல் இவைகள் நீர் நிலைகள் எனப்படும்.

ஆழமான கிணறுகளிலிருந்து ஊறிவரும் நீரே சுத்தமானது. கிணற்றைச் சுற்றிலும் கைப்பிடி சுவர் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். மழை நீருடன் கலந்த அசுத்தப் பொருள்கள் கிணற்றில் விழாவண்ணம் அச்சுவர் தகுந்த பாதுகாப்பாகும். கிணற்றின் அருகில் மரங்கள் இருத்தல் கூடாது. அவற்றினின்றும் இலைகள் சருகுகள் கிணற்றில் விழுந்தால் நீர் அசுத்த மாகும். சூரிய வெப்பம் கிணறுகளுக்கு மிகவும் அவசியமானது.



இது ஒரு குளம். இதற்கு நான்கு பக்கங்களிலும் கரை இருக்கிறது. இது, ஜனங்கள் ஸ்நானம் செய்வதற்கும் துணி

துவைப்பதற்கும் உபயோகப்படுகிறது. சில குளங்களில் ஆடு மாடுகளைக் குளிப்பாட்டுகிறார்கள். அந்நீர் குடிப்பதற்கு உபயோகப்படாது.

மீன்கள் நீரில் வசிக்கும். அவை, நீரில் இருக்கும் அசுத்தங்களைத் தின்று நீரைச் சுத்தம் செய்கின்றன. சில குளங்களில் தாமரை இருக்கும்.



குளத்தைக் காட்டிலும் பெரியது ஏரி. ஏரியை நீங்கள் சாதாரணமாய்க் கிராமங்களில் பார்க்கலாம். பயிரிடுவதற்குச் சேமித்து வைக்கப்படும் நீர் நிலையே ஏரி யெனப்படும். அதிகமான நீர் ஏரிக்கு வந்து விட்டால் கரைக்கு அபாயம் நேரிடும். அது நேரிடாவண்ணம் கரையின் கோடியில் கலுங்கல் கட்டப்பட்டிருக்கும். அவைகளின் வழியாக அதிகமான நீர் வழிந்துவிடும். கரையில் சில இடங்களில் மதகுகள் கட்டப்பட்டிருக்கும். அவற்றினின்றும் நீர், நிலங்களுக்கு வாய்க்கால் வழியாகப் பாயும்.

ஆறுகள் சாதாரணமாய் மலைகளில் உற்பத்தியாகின்றன. அவ்விடத்தில் ஆறு சிறிதாகக் காணப்படும். அது பூமியில் கொஞ்ச தூரம் ஓடின பிறகு, அனேக

சிற்ருறுகளோடு கலந்து பெரிதாகிறது. அகலமாயும் ஆழமாயுமுள்ள ஆறுகளில் வியாபாரத்துக்காகப் படகுகள் போவதுண்டு. ஆற்றை அடுத்துள்ள கிராமங்களுக்கு ஆற்று நீர் பற்பல விதங்களில் பயன் படுகிறது. "ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்" என்றபடி ஆறே ஊருக்கு அழகைத் தருகிறது. சில நதிகளில் ஸ்நானம் செய்தல் புண்ணியம் என்பது சிலர் கொள்கை.

இது கடல். இதுவே நீர் நிலைகளுள் மிகவும் பெரியது. உலகம் செழிப்படைந்து க்ஷேமம் அடைவதற்குக் கடலே காரணமென்னலாம். மழை உண்டாவதற்கு மூல காரணம் கடலேயாகும். நமது

உணவுப் பொருள்களில் முதன்மையாயுள்ள உப்பு, கடலினின்றே உண்டாகின்றது. கப்பல்கள் செல்வதற்கு இடமாயிருத்தலால், வியாபாரத்திற்கும் கடல் காரணமாகிறது. திமிங்கிலம் முதலிய பெரிய பிராணிகளுக்குக் கடல் வசிக்கும் இடமாயிருக்கிறது. முத்து முதலிய இரத்தினங்கள் கடலில் உண்டாகின்றன. இக்காரணத்தால் கடல் ரத்நாகரம் எனப் பெயர்பெறும்.



12. தென்னம் பிள்ளை

இந்தப் படத்தில் இருக்கும் தென்னம் பிள்ளையைப் பார். அது எவ்விதம் பயிரிடப்படு கிறது என்று கவனிப்போம்.

மட்டையோடு கூடின தேங்காயை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அம்மட்டை தேங் காயின்மேல் அழுத்தமாகப் பதிந்து இருக்கிறது. அதைஉரித்தால் நார் வரும். அதற்குள் கெட்டி யான ஓடும், அவ்வோட்டின் மேல் புறத்தில் மூன்று கண்களும் இருக்கின்றன. ஓட்டுக்குள் வெண்மை யான தேங்காய்ப் பருப்பும் இளநீரும் இருக் கின்றன.

மட்டை உரிக்கப்படாத முற்றின தேங்காயைத் தேர்ந்தெடுத்து, அதை நீர் பாயுமிடத்தில் புதைத்து வைப்பார்கள். சில நாள் சென்றதும் அதிலிருந்து முளை கிளம்பி, இளநீர் இருக்கும் இடத்தில் பரவுகிறது. அப்பொழுது அதற்கு இளநீரும் தேங்காய்ப் பருப்புமே ஆகாரமாகும். பிறகு அம்முளை மேல்நோக்கி வளர ஆரம்பிக்கின்றது; சிறிது சிறிதாக இளங்குருத்து மேலே எழுகின்றது. பிறகு இலைகள் விட ஆரம்பிக்கிறது; பூமிக்குள் வேரும் பரவுகின்றது.

ஆறு மாதங்களான பிறகு தென்னம் பிள்ளையைப் பெயர்த்து வேறிடங்களில் புதைக்கவேண்டும். நாலடிக்குக் குறையாமல் ஆழமாகக் குழி தோண்டி, அதில் ஆற்று மணல், உப்பு முதலியவை களைக் கொட்டி, பெயர்த்த பிள்ளையை அதில் நட்டுத் தினந்தோறும் ஜலம் ஊற்றி வரவேண்டும்.

தென்னம் பிள்ளை சுமார் ஐந்து வருஷங்களில் சிறிய மரமாகும். அதில் பாளை உண்டாகிக் காய்கள் காய்க்க ஏறக்குறைய ஏழெட்டு வருஷங்கள் செல்லும். சாதாரணமாகச் சில தென்னை மரங்கள் ஐந்து வருஷங்களுக்குள்ளும் காய்க்க ஆரம்பிக்கும். நல்ல மரத்தினின்று தடவை ஒன்றுக்கு நூறு காய்கள் வீதம், ஒரு வருஷத்தில் இரண்டு தடவைகளாகக் காய்கள் பறிக்கலாம்.

13. காற்று

ஆகாயத்தில் எங்குப் பார்த்தாலும் வாயு நிறைந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஏனென்ருல் நாம் வாயுவை எப்பொழுதும் சுவாசித்துக் கொண்டே இருக்கிறோம். அல்லாமலும் விசிறியினுல் விசிறிக்கொண்டால் காற்று அடிப்பதை நாம் உணரலாம். அதனுல் வாயு எங்கும் பரவி இருக்கிறதென்பது நமக்கு நன்கு விளங்குகிறது.

ஆனுல் காற்று எப்பொழுதும் ஒரே மாதிரியாய் அடிப்பதில்லை. சில வேளைகளில் காற்று மந்தமாக வீசுகிறது; வேறு சில சமயங்களில் வேகமாகவும் அடிக்கிறது. காற்று எவ்வாறு வீசுகிறது தெரியுமா?

வெயில் அதிகமாக எரிக்கும்போது அங்கேயுள்ள எல்லாப் பொருள்களும் உஷ்ணத்தை அடைகின்றன. அவற்றுடன் அங்குள்ள வாயுவும் சூடாகி இலேசாக ஆகிறது. புகை ஆகாயத்தில் கிளம்புவதுபோல அந்த உஷ்ணமான வாயுவும் மேலே செல்லுகிறது. அப்பொழுது பக்கங்களிலுள்ள வாயு வந்து அவ்விடத்தில் நிறைந்து விடுகிறது. எப்பொழுதும் குளிர்ந்த இடத்திலிருந்து காற்று உஷ்ணமான இடத்தை நோக்கியே வீசும். மாலை நேரத்தில் சமுத்திரத்திலிருந்து கரையை நோக்கிக் காற்று வீசுவதை

நாம் பார்க்கலாம். அது ஏன்? பூமியின் மீதுள்ள வாயு சூரிய வெப்பத்தால் உஷ்ணத்தை அடைகிறது. கடல் நீரின் மேல் இருக்கும் காற்று குளிர்ந்திருத்தலால் அது நிலத்தை நோக்கி வீசுகிறது.

காற்றினுல் நமக்கு மிகுந்த பிரயோஜனம் உண்டு. நல்ல காற்று நமக்கு உற்சாகத்தையும் தேக வலிமையையும் கொடுக்கின்றது. மழை உண்டாவதற்குக் காற்று காரணமாயிருக்கிறது. கடலில், படகுகளும் கப்பல்களும் காற்றின் உதவியினுலே செல்கின்றன. நீராவிக் கப்பல்கள் ஏற்படுவதற்கு முன், கப்பல்களைக் காற்றின் உதவியினுலேயே செலுத்திக்கொண்டு வந்தார்கள்.



காற்றினுல் ஒருவித யந்திரம் வேலை செய்கிறது. இப்படத்தைப் பாருங்கள். காற்று ஆகாயத்தில் வீசும்போது, அது யந்திரத்தின் உச்சியில் உள்ள காற்றாடியைச் சுழற்றுகின்றது. அப்போது அதிலிருந்து தொடுக்கப்பட்டுள்ள மற்றொரு சக்கரமும் கூடச் சுழல்கிறது. இவ்விதம் அதிக பணச் செலவு இல்லாமலே காற்றின் உதவியால் தோட்டங்களில் தண்ணீர் இறைக்கப்படுகிறது,

14. நிறுத்தல் அளவை

கடையில் போய் நீ வெல்லம் கேட்டால் கடைக்காரன் என்ன செய்கிருன்? அவன் தராசை எடுத்து, ஒரு தட்டில் நிறைக் குண்டைப் போட்டு, மற்றொரு தட்டில் வெல்லத்தை வைக்கிருன். தராசின் மத்தியிலுள்ள சிறு கயிற்றைப் பிடித்து அவன் தூக்குகிருன். அக் கோலின் இருபுறமும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் சமனுக நின்ருல் நிறை சரியானதாகும்.



பிறகு அவன் வெல்லத்தை ஒரு காகிதத்தில் வைத்து மடித்து நம்மிடம் கொடுக்கிருன்.



தராசுகளில் பலவகை உண்டு. சில தராசுகளின் நடுவில் முள் இருக்கும். அம்முள் ஒரு பக்கமும் சாயாதபடி செங்குத்தாக நின்ருல் நிறை சரியானதாகும்.

காய் கறிக் கடைகளில் வேறு விதமான தராசு உண்டு. அதை அனேகமாய்க் கிராமங்களிலே தான் காணலாம். அதற்குக் கயிற்றுக்கோல் அல்லது தூக்கு என்று பெயர். அதற்கு ஒரே தட்டுதான்



உண்டு. கோலில் சில கோடுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. அவை நிறையைக் காட்டும். அந்தக் கோலில் சிறிய கயிறு ஒன்று இருக்கும். தட்டில் சாமான்களை வைத்த பின்பு, அந்தக் கயிற்றை வேண்டிய கோட்டில் தள்ளித் தூக்கினால் கோல் ஒழுங்காய் நிற்கும். அப்போது அது சரியான நிறையாகும்.



சில கடைகளில் சாமான்களை நிறுக்க ஸ்பிரிங் தராசு என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அதன் அடியில் ஒரு கொக்கி இருக்கும். நிறுக்க வேண்டிய சாமானைத் தட்டில் வைத்து, அதை அந்தக் கொக்கியில் மாட்டி விடுவார்கள்; அல்லது அச்சாமானைக் கொக்கியில் கட்டியும் தொங்க விடலாம். அந்தத் தராசில் ஒரு முள் இருக்கிறது. அது நிறையைக் காட்டும்.

ரயில்வே ஸ்டேஷன்களில் வேறு வித தராசு இருக்கின்றது. அந்தத் தராசில், இரும்பினால் செய்த மேடை போன்ற அகன்ற இடம் ஒன்று உண்டு. அதில் சாமான்களை வைத்து நிறுத்தால், தராசு சரியான நிறையைக் காட்டும்.



15. நீரும் அதன் குணங்களும்

மனிதர் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள்களில் தண்ணீரும் ஒன்று. நாம் உண்ணும் உணவிலும் பாதிக்கு மேல் ஜலமே செல்லுகின்றது. செடி கொடிகளுக்கும் தண்ணீர் முக்கிய ஆகாரமாகிறது. இதனுல் ஜீவப் பிராணிகளுக்குத் தண்ணீர் எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் அறியலாம்.

சுத்தமான நீருக்கு நிறமும் ருசியும் மணமும் இல்லை. ஆறுகளிலும் குளங்களிலும் இருக்கும் நீர் சுத்தமானது அன்று. அதில் அனேக பொருள்கள் கண்ணுக்குத் தெரியாமல் கரைந்திருக்கின்றன. அந்நீரைக் காட்டிலும் கிணற்று நீரும் ஊற்று நீரும் சுத்தமானவை. மழை ஜலம் எல்லாவற்றையும்விட மிகச் சுத்தமானது. ஆனுல் அது எப்பொழுதும் நமக்குக் கிடைப்பதில்லை. ஆதலால் கூடியவரையில் கிணற்று நீரையாவது வேறு ஊற்று நீரையாவது காய்ச்சி வடிக்கட்டிச் சாப்பிடுவது நலம்.

நீருக்குச் சில குணங்கள் உண்டு. "வெள்ளம் பள்ளத்தை நாடும்" என்னும் பழமொழிப்படி நீர் பள்ளமான இடத்தை நோக்கி ஓடும். பள்ளம் அதிகமானுல் நீருக்கு வேகம் அதிகம்.

சில இடங்களில் மலையின் உச்சியிலிருந்து ஜலம் கீழே விழும். அதற்கு 'நீர் வீழ்ச்சி' என்று பெயர். இப்படிப்பட்ட வீழ்ச்சிகள் நமது இராஜதானியில் குற்றாலம், சிவசமுத்திரம், மேலைத் திருப்பதி முதலிய இடங்களில் இருக்கின்றன.

ஜலத்தில் பல பொருள்கள் கரையும். கடல் நீர் உப்பாயிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? ஜலத்தின் ருசியினாலும், கனத்தினாலும், அது கலப்புள்ளதா அன்றா என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

குளத்தில் உள்ள நீரைக் கவனித்துப் பாருங்கள். அது ஒரே மட்டமாக இருக்கிறது; ஆனால் குளத்தின் ஆழம் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை. ஜலத்தினுள்ளே சில இடங்கள் மேடாயும் சில இடங்கள் பள்ளமாயும் இருக்கும். ஆனாலும் பார்வைக்கு ஜலம் ஒரே மட்டமாகத்தான் தோன்றுகிறது. இவைகளே நீரின் குணங்களாம்.

ஜலத்தைக் காய்ச்சினால் அது ஆவியாக மாறும். உலைநீரிலிருந்து ஆவி கிளம்புவதை நீங்கள் பார்த்திருக்கலாம். அந்த ஆவிக்கு வலிமை அதிகம். நீரை ஒரு பாத்திரத்தில் வார்த்து மூடிவிட்டுக் காய்ச்சினால், அந்த ஆவி அந்த மூடியைத் தள்ளும். நீராவியே ரயில் வண்டிகளையும் கப்பல்

களையும் செலுத்துகின்றது. அது இன்னும் அனேக இயந்திரங்களையும் ஓடச் செய்கிறது. நீராவியை வேறொரு பாத்திரத்தில் பிடித்துக் குளிரச் செய்தால், அது மறுபடியும் சுத்த ஜல மாகிறது. அந்த நீரைக் குடித்தால் சரீரத்திற்கு ஆரோக்கியம் உண்டாகும்.

---

16. குசேலர்

முன் காலத்தில் சுதாமா என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் பரம ஏழை. அவர் ஆடை மிகக் கந்தலா யிருக்கும். ஆகையால் அவ ருக்குக் குசேலர் என்ற பெயர் உண்டாயிற்று.

அவர் மனைவியின் பெயர் சுசீலை. அவள் மிகுந்த நற்குணம் உள்ளவள். அவளுக்கு இருபத்தேழு குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் உணவு இல்லாமல் மிகவும் வருந்தினர். அதனால் சுசீலை மிகவும் கவலைப்பட்டு வந்தாள்.

குசேலருக்கு ஒரு நண்பர் இருந்தார். அவர் பெயர் கண்ணபிரான். அவர் துவாரகைக்கு அரசர். இவர்கள் இருவரும் இளமையில் ஒரே குரு வினிடம் கல்வி கற்றவர்கள். இதை யறிந்து சுசீலை தனது கணவனைக் கண்ணனிடம் செல்லும் படி வேண்டிக்கொண்டாள். குசேலர் தமது மனைவி விரும்பியபடி துவாரகையை அடைந்தார். அரச ரைக் காண வெறுங்கையுடன் போகலாகாது என்று தெரிந்து, சுசீலை அவரிடம் சிறிது அவல் கொடுத்து அனுப்பியிருந்தாள்.

கண்ணனுடைய அரண்மனை வாயிலில் அவ ரைக் காண அனேக அரசர்கள் கூட்டமாகக் காத்துக்கொண்டு இருந்தனர். யானைகளும், குதிரைகளும், தேர்களும் எங்கும் நெருங்கி நின் றன. குசேலர் கஷ்டப்பட்டு மெதுவாக அக் கூட்டங்களைத் தாண்டிச் சென்றார். வாயில் காவ லர் குசேலரின் வரவைக் கண்ணனுக்குத் தெரி வித்தார்கள். கண்ணன் உத்தரவின்மேல் குசேலர்

உள்ளே சென்றார். அவரைக் கண்டதும் கண்ணன் ஓடிவந்து கட்டி அணைத்துக் கொண்டார்; குதித்தார்; கூத்தாடினார். பிறகு இருவரும் அரண்மனைக்குள் சென்றார்கள்.

குசேலரிடம் கண்ணன் பற்பல பேச்சுக்களைப் பேசிக்கொண்டு மிகவும் அன்பாக இருந்தார்; இவ்வாறு இருக்கும்போது குசேலரிடம் இருந்த சிறு மூட்டையைக் கண்டார். அதைத் தாமே அவிழ்த்துப் பார்த்தார்; அதில் அவல் இருக்கக் கண்டு, அதில் ஒரு பிடி எடுத்து ஆவலோடு உண்டு களித்தார். குசேலரும் மிகச் சந்தோஷத்துடனே சில நாள் அங்கேயே தங்கி யிருந்தார். குசேலருக்குக் கண்ணனிடம் பொருளுதவி கேட்க மனம் வரவில்லை. ஏனென்றால் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதாரமான கண்ணபிரானைக் கண்ணுற்பார்த்தும், 'அழியக்கூடிய அற்ப செல்வத்தையா கேட்பது!' என்று அவருக்குத் தோன்றிற்று. ஆகையால் அவர் ஒன்றும் கேட்காமலே தமது ஊருக்குத் திரும்பி விட்டார்.

குசேலர் தமது ஊர் வந்ததும், அவர் குடிசை அரண்மனை ஆயிற்று. கந்தல் துணிகள் பட்டாடைகளாக மாறின. இவ்வாறு கிருஷ்ணனுடைய அருளால் சுதாமா ஒரு பெரிய பிரபு ஆனார்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

17. கீழ்ப்படிதல்

இராகம்-ஸஹானா] [தாளம்-சாபு

1. பெற்று வளர்த்து உன்னை எடுத்துத்—தினம்
பேணி மருந்துகளும் கொடுத்து—உன்னைச்
சற்றுங் குறையிலாமற் காப்பாள்—அந்தத்
தாய் சொல்லைத் தவறாமல் கேட்பாய்.

2. வேண்டும் உணவு உடை வாங்கி—மிக
விரும்பி உன்னை என்றுந் தாங்கி
தூண்டும் கல்விச் செல்வம் அளிப்பார்—தந்தை
சொற்படியே கேட்டு நடப்பாய்.

3. கல்வி நன்றாய்க் கற்றுக் கொடுத்து—உன்னைக்
கனிவுடன் நல்வழியில் விடுத்து—என்றும்
நல்ல செய்யும் ஆசிரியர் பாலே—நீ
நன்றாய் நடந்துகொள் இப்போதே.

4. மற்றும் பெரியோர் சொல்லைக் கேட்பாய்-அதை
உற்ற நலமாக ஏற்பாய்—உன்
குற்றங்குறை யெல்லாம் போகும்—நல்ல
குணவான் என்றும் பெயராகும்.

5. நாளும் நமது இந்து தேசம்—மிக
நன்றாய் ஓங்கவே நேசம்—கொண்
டாளும் அரசர்மேல் அன்பாய்—என்றும்
அமைவாய் அது நல்ல பண்பாம்.

18. சீதையும் புள்ளிமானும்

[இடம் :—பஞ்சவடி. ஆற்றோரத்தில் ஒரு சோலையில் அழகிய ஒரு பர்ண சாலை (குடிசை). அதன் வாயிலில் இராமர், சீதை, லக்ஷ்மணர் ஆகிய மூவரும் நிற்கின்றனர். அவர்களின் எதிரே அழகான புள்ளிமான் ஒன்று துள்ளி விளையாடுகிறது.]

இராமர்—சீதே! இந்த வனம் எவ்வளவு அழகாய் இருக்கின்றது பார்! மரங்களின் தளிர்கள் பொன்போல் பளபளப்பாய் இருக்கின்றன. புஷ்பங்கள் நக்ஷத்திரங்கள் போலவும், கனிகள் இரத்தினங்களைப் போலவும் விளங்குகின்றன. பறவைகள் எவ்வளவு இனிமையாய்ப் பாடுகின்றன !

சீதை—ஆம்! இவ்வனம் பார்ப்பதற்கு வெகு அழகாய்த்தான் இருக்கிறது. அதோ பார்த்தீர்களா ஒரு மான் நிற்பதை. அது என்ன ? பொன்

மானே? இவ்வளவு அழகான மிருகத்தை நீங்கள் எப்பொழுதேனும் பார்த்திருக்கிறீர்களா?

இராமர்—பார்த்த தில்லை. அது வெகு அபூர்வ மாகத்தான் தோன்றுகிறது.

சீதை—அதை எனக்குப் பிடித்துத் தரவேண் டும். அதை நமது ஆச்சிரமத்தில் வைத்து வளர்க்க விரும்புகிறேன்.

லக்ஷ்மணர்—அண்ணா! மிருகத்தில் பொன் மிருகம் என்று ஒன்று உண்டோ? நீங்களும் மயங்குகிறீர்களே. இதில் ஏதோ மோசம் இருக்க வேண்டும். காரியம் அற்பமானாலும் ஆலோசியா மல் செய்வது கூடாது.

சீதை—மைத்துனர் என்ன இப்படிச் சந்தேகப் படுகிறார்! எத்தனையோ அபூர்வமான பொருள்களைச் சிருஷ்டித்திருக்கும் கடவுள் ஏன் இப்படிப்பட்ட ஒரு பிராணியைப் படைத்திருக்கக் கூடாது? மேலும், உயிருடன் விளையாடித் திரிகிற இந்த மிருகத்தினிடம் உங்களுக்கு ஏன் சந்தேகம்? இதைப் பிடித்துத் தர உங்களுக்குத் தைரியம் இல்லாமல் போய்விட்டதோ? யானைகளையும் சிங்கங்களையும் ஒரே பாணத்தால் அடித்து வீழ்த்தும் உங்கள் பலத்தை இப்பொழுது இழந்து விட்டீர்களா என்ன?

லக்ஷ்மணர்—அண்ணு! கடவுளின் சக்தியை யாவது, தங்கள் வில்லின் வலிமையையாவது நான் இகழ்ந்து பேச வரவில்லை. அப்படிப்பட்ட பாவத்தை அடியேன் ஒருநாளும் மனத்திலும் கருதேன். ஆனல் இந்தக் காட்டுக்கு வந்தது முதல் அனேக அரக்கர்களை நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் பெரிய மாயாவிகள். நினைத்த உருவம் எடுக்கும் தன்மை உள்ளவர்கள். அதனுல் தான் என் மனம் மயங்குகிறது.

சீதை—இளையவருக்கு மனம் எப்பொழுதுமே மயங்கும். அவருக்கு எதை எடுத்தாலும் சந்தேகமும் கவலையும் தான். பிரபுவே! தாங்கள் எனக்கு அந்த மானைப் பிடித்தே தரவேண்டும். நான் இது வரையில் தங்களை இவ்விதம் கேட்டதுண்டா! மறுக்காமல் தயவு செய்து என் விருப்பத்தை நிறைவேற்றுங்கள்.

இராமர்—சீதே! உன் இஷ்டப்படியே செய்கிறேன். வருத்தப் படாதே. தம்பீ! நான் வரும்வரையில் இவளைப் பாதுகாத்துக்கொண்டு இங்கேயே இரு. அது உண்மையான மானுனல் உயிருடன் பிடித்து வருவேன். மாய மானுனல் கொன்று விடுவேன்.

லக்ஷ்மணர்—அப்படியே செய்யுங்கள், அண்ணு!

[இராமர் மானைப் பின் தொடர்ந்து, அது மாய மான் என்று அறிந்து அதைக் கொன்ருர்.]



19. காசி நகரம்

காசி என்பது வட இந்தியாவில் உள்ள ஒரு பெரிய நகரம். அது புண்ணிய ஸ்தலங்களுள் ஒன்று. அதில் ஒரு பெரிய கோயில் இருக்கிறது. அதன் கோபுரங்கள் உயரமாயும் அழகாயும் விளங்குகின்றன. அக்கோயிலிலுள்ள சுவாமியின் பெயர் ஸ்ரீ விசுவநாதர்.

அந்நகரத்தில் கங்கை என்னும் நதி ஓடுகிறது. அதுவே நமது தேசத்தில் ஓடும் ஆறுகளில் மிகவும் பெரியது. அது இமயமலையில் உற்பத்தியாகி, காசியின் வழியாகச் சென்று, கடலில் விழுகிறது. காசியில் வருகிற அனைவரும் அந்நதியில்

ஸ்நானம் செய்து கோயிலுக்குச் செல்வார்கள். கங்கையிலுள்ள நீர் ஒரு நாளும் வற்றுவதில்லை. இந்துக்கள் அந்நதியைப் புண்ணிய நதியாகக் கருதுகின்றனர். பல இடங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் ஸ்நானம் செய்ய அவ்விடம் செல்வார்கள்.

"காசியில் இறக்க முக்தி" என்னும் பழமொழிப்படி வயது சென்றவர்கள், இறப்பதன் பொருட்டே அங்கு வந்து வசிப்பதுண்டு. காசியில் இறந்தவர்களுக்கு மோக்ஷம் உண்டாகும் என்பது இந்துக்களின் கொள்கை.

காசி நகரம் பட்டு உடைகளுக்குப் பெயர் போனது. அந்நகரத்தில் ஒரு அரசர் இருக்கிறார். அவ்விடத்தில் ஒரு பெரிய ஸர்வகலாசாலை இருக்கிறது. அதற்கு "இந்து ஸர்வகலாசாலை" என்று பெயர். இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் சிறுவர்கள் அங்கே சென்று படிக்கிறார்கள்.

20. பொருள்கள்

மனிதர்களுக்குப் பயன்படும்படி கடவுள் அனேக பொருள்களைப் படைத்திருக்கிறார். அவைகளில் சில கல்லைப்போல் கடினமானவை; சில நீரைப் போல் ஓடும் தன்மையுள்ளவை; சில

காற்றைப்போலக் கண்ணுக்குத் தெரியாதவை. பலகை, கல் முதலியன கடின வஸ்துக்கள்; அவைகளுக்குத் திட பதார்த்தங்கள் என்று பெயர். எண்ணெய், ஜலம், பால் முதலியன ஓடும் தன்மையுள்ளவை; இவைகள் திரவ பதார்த்தங்கள். காற்று புகை இவைகள் வாயு பதார்த்தங்களாகும்.

திட பதார்த்தங்களில் சிலவற்றைச் சொல்லு. அவை பல உருவங்கள் உள்ளவை. சில பொருள்களை உடைத்தால் ஒழிய அவைகளின் உருவங்கள் மாறுவதில்லை. சில திடப் பொருள்கள் நெருப்பில் உருகும்; சில எரிந்துவிடும்; சில நீரில் கரையும்; சில கரையமாட்டா.

திரவப் பொருள்களுக்குத் தனியாக உருவம் கிடையாது. திரவ பதார்த்தத்தை ஒரு குடத்தில் கொட்டினால் அது குடத்தின் உருவத்தையே அடையும்; அதை ஒரு குழாயில் ஊற்றினால் அக்குழாயின் உருவத்தையே கொள்ளும்.

வாயுவை நாம் பார்க்க முடியாது; ஆனால் அதைப் பரிச உணர்ச்சியால் அறிகிறோம். காற்றிற்கு வேகமும் கனமும் உண்டு.

பனிக்கட்டியை வெயிலில் வைத்தால் அது ஜலமாக மாறும். ஜலத்தைக்கொதிக்கக் காய்ச்சினால் அது ஆவியாகப் போய்விடும். ஆகையால் ஒரு பொருள் மற்றொன்றாக மாறுவதும் உண்டு.

21. சண்டேசுவரர்

ஓர் ஊரில் விசார சருமன் என்று ஒரு பையன் இருந்தான். அவன் பிராணிகளிடத்தில் மிகவும் அன்புள்ளவன். கடவுளிடம் அவனுக்கு மிகுந்த பக்தி உண்டு. ஒரு நாள் அவன் ஒரு ஆற்றங்கரை ஓரமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு இடையனைக் கண்டான். அவ்விடையன் சிறிதும் இரக்கம் இல்லாதவன். ஒரு நாள் அவன் பசுக்களை அடித்து மிகவும் வருத்தினான். விசார சருமனுக்கு அதைப் பார்க்க வருத்தம் உண்டாயிற்று.

ஆகவே அவன் மிகுந்த கவலையுடன் ஊராரிடம் வந்து இச்செய்தியைச் சொன்னான்; அவர்கள் அனுமதியின் மேல், தானே மாடுகளை

மேய்க்கவும் ஒப்புக்கொண்டான். அவனிடம் மாடுகள் அடங்கி நன்ருய் மேய்ந்து வந்தன. முன்னேவிட அவைகள் இரண்டு பங்கு பால் கறந்தன. விசாரசருமனிடம் எல்லோரும் சந்தோஷம் கொண்டார்கள்.

விசார சருமனுக்குச் சிவ பூஜை செய்வதில் விருப்பம் அதிகம். மாடுகள் எல்லாம் மேய்ந்து கொண்டிருக்கும் பொழுது, அவன் ஆற்றில் ஸ்நானம் பண்ணி, மணலினல் ஒரு லிங்கம் பிடித்து வைப்பான்; செடிகளிலிருந்து புஷ்பங்களேயும் தளிர்களேயும் பறித்து வந்து பூஜை செய்வான். பசுக்கள் தாமாகவே அவனுக்குப் பாலேப் பொழியும். அதைக்கொண்டு அவன் அந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வான். இப்படியே பல நாளும் அவன் மாடுகளே மேய்த்துக் கடவுளேயும் பூசித்து வந்தான்.

அவன் இவ்விதம் இளம் பிராயத்தில் மிகுந்த பய பக்தியுடன் செய்யும் பூஜைக்குச் சிவ பெருமான் மனம் இரங்கி இருஷப வாகனத்தின்மேல் அவனுக்குக் காட்சி அளித்தார். அவரைக் கண்டவுடன் விசார சருமன் அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லே. அப்போது கடவுள் சிறுவனே நோக்கி, "அன்பனே! நீ என்னிடம் கொண்ட பக்தியின் மிகுதியாலும், பசுக்களே அன்போடு வளர்த்ததாலும், உன்னிடம் நாம் மிக்க அன்பு கொண்

டோம். இன்று முதல் நீ சண்டேசுவரனாகி எப்பொழுதும் என் அருகில் இருப்பாய்" என்று கூறி அழைத்துச் சென்றார். இப்பொழுதும் சிவன் கோயில்களில் சண்டேசுவரர் இருப்பதை நீங்கள் காணலாம். யாவரும் அவரிடம் சென்று கைதட்டி வணங்கியே வருவர்.

பசுவைப் போற்றி வளர்த்தல் பெரும் புண்ணியம்.

---

22. நெல்

தென்னிந்தியாவில் வசிக்கும் ஜனங்களின் உணவுப் பொருள்களில் அரிசியே முக்கியமானது. அரிசி நெல்லிலிருந்து எடுக்கப்படுகிறது. நெல்,

வட இந்தியாவில் கங்கா நதி பாயப் பெற்ற இடங்களிலும், தென்னிந்தியாவில் பற்பல இடங்களிலும் பயிரிடப் படுகிறது. நெற் பயிருக்கு ஏராளமான ஜலம் வேண்டுமாதலால், ஆறுகள் பாயப்பெற்ற இடங்களே அதற்கு ஏற்றவையாகும். நெல் பயிரிடப்படும் நிலம் நன்செய் எனப்படும். சோளம், கம்பு முதலிய தானியங்கள் விளையும் பூமி புன்செய் நிலமாகும். புன்செய் நிலங்களிலும் நெல் பயிரிடுவது உண்டு.

172982

தென்னிந்தியாவில் பல வகைப்பட்ட நெற்கள் உற்பத்தியாகின்றன. அவைகளில் முக்கியமானவை, சம்பா, கார், குறுவை முதலியன. இவற்றுள் சில ஆறு மாதப் பயிர்கள்; சில மூன்று மாதப் பயிர்கள். ஆறு மாத காலம் பயிராகும் தானியமே உணவிற்கு ஏற்றது. அதுவே சம்பா எனப்படும்.

சாதாரணமாய் நமது நாடுகளில், பயிரிடுவதற்கு ஏற்ற காலம் ஆனி ஆடி மாதங்களே. அப்போது தான், நீர்ப்பாய்ச்சலுக்கு உரிய ஆறு ஏரிகளில், போதுமான ஜலம் இருக்கும். சம்பாப் பயிர் ஆடி மாதம் ஆரம்பிக்கப்பட்டு, தை மாதம் அறுவடையாகும். சில வயல்களில் ஆடி மாதம் முதல் புரட்டாசி மாதம் வரையில் ஒரு பயிரும், ஐப்பசி மாதம் முதல் மாசி மாதம் வரையில் ஒரு பயிரும், ஆக வருஷத்திற்கு இரு முறை பயிரிடுவது உண்டு.

அறுவடையான நெல்லை வெயிலில் காய வைத்துக் களஞ்சியத்தில் சேமித்து வைப்பார்கள். சில இடங்களில், பூமியில் பள்ளம் தோண்டி, அப்பள்ளத்தில் வைக்கோலைப் பக்குவமாகப் போட்டு, அதில் நெல்லைக் கொட்டி மூடிவைப்பார்கள். வேண்டும்போது, நெல்லை எடுத்துக் குற்றிக் கொள்வார்கள். அவ்வரிசி பச்சையரிசி எனப்படும். சிலர் நெல்லைப் புழுக்கிக் குற்றிக் கொள்வதும் உண்டு. அது புழுங்கலரிசி எனப்படும்.

சில வருஷங்களுக்குமுன்பு நெல்லைக் கையால் குற்றி வந்தார்கள். இப்பொழுதோ நெல் யந்திரங்களின் உதவியினலேயே பெரும்பாலும் குற்றப்பட்டு வருகிறது. யந்திரத்தினல் குற்றப்படும் அரிசி, சரீர சுகத்தைக் கெடுத்து விடுகிறது. ஏனெனில் சரீரத்திற்குப் பலத்தைக் கொடுக்கும் சாரமான வஸ்துவானது, யந்திரத்தினல் அரிசியிலிருந்து நீங்கிப் போய்விடுகிறது. ஆனல் கைக் குற்றலில் அப்பொருள் அவ்வாறு போவதில்லை.

நெல் குற்றப்படும்போது, அது அரிசி, உமி, தவிடு என மூன்று பாகங்களாகப் பிரிகிறது. நெல்லில், உமிக்கும் அரிசிக்கும் இடையில் தவிடு இருக்கிறது. அது மாடுகளுக்கும் கோழிகளுக்கும் தீனியாக உதவுகிறது. உமி அடுப் பெரிக்க உதவும். சாணத்தோடு கலந்து வறட்டி தட்டுவற்கும் அதை உபயோகிக்கலாம்.

இராகம்-பைரவி] 23. நல்லொழுக்கம் [தாளம்-ஆதி

1\. காலை வேளை எழுந்திருந்து
கடவுள் பாதம் கைதொழுது
சாலவே பல் முகங்கழுவிக்
கை கால்களையுஞ் சுத்தி செய்வீர்.

2\. குளித்து முழுகி உடுத்து முன்னம்
கொடுத்த பாடந் தனைப்படித்து
அளித்த உணவை அருந்திப் பின்னர்
அடைவீர் பாட சாலைதன்னை.

3\. ஆசிரியர் சொற்கேட்டு
அமரிக்கையாய் அங்கிருந்து
நேசருடன் மாலைதன்னில்
நேராய் விளை யாடிடுவீர்.

4\. அந்தி நேரம் வீடு வந்து
அன்பாய்க் கடவுள் தனைப் பணிந்து
சிந்தையுடன் பாடங்களைத்
தெளிவாய்ப் படித் தறிவீரே.

5\. பெற்றோர் களுக்குக் கீழ்ப்ப டிந்து
பெரியோர் புத்தி மறவாமல்
உற்று றுறவோ ருடன்சேர்ந்து
உவந்து வாழ்ந்து மகிழ்வீரே.

6. என்றும் இனிமை யாய்ப் பேசி
   ஏழைக் குதவி செய்திடுவீர்
   கன்றுமாடு தன்னைப் பேணிக்
   காப்பாற்றுவீர் அடிக்காமல்.

7. பொய்யும் களவும் முதலான
   பொல்லாப் பிழைகள் செய்யாமல்
   மெய்யாய் நடந்து நல்லோராய்
   மேவி வாழ்வீர் சிறுவர்களே !

---

24. நமது தாய் நாடு (இந்தியா)

நமக்குத் தாய்மார் யாவர் ? நம்மைப் பெற்றவள் ஒரு தாய்; அன்புடன் வளர்த்தவள் ஒரு தாய்.

நமக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் தந்து, நம்மைக் காப்பாற்றுவதால் நமது இந்திய நாடும் நமக்கு ஒரு தாய் தான்.

நமக்குத் தாய் நாடாகிய இந்தியாவே நாம் வசிக்கும் தேசம். நமது நாட்டில் கோடிக்கணக்கான ஜனங்கள் வசிக்கிறார்கள். அவர்களில் பலர் இந்துக்கள் ; மற்றவர், முகமதியர், கிறிஸ்தவர் முதலியோர்.

நமது நாட்டில் பல பெரிய மலைகள் இருக்கின்றன. அவைகளுள் மிகவும் பெரியது இமயமலை. இந்நாட்டில் ஆறுகளும் அனேகம். அவைகளில் கங்கை, ஸிந்து, கோதாவரி, காவேரி என்பவை முக்கியமான புண்ணிய நதிகள். இந்தத் தேசத்தில் நமக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் கிடைக்கின்றன.

இந்தியாவில் காசி, துவாரகை, காஞ்சி, மதுரை, இராமேசுவரம் முதலியவை முக்கியமான புண்ணிய ஸ்தலங்கள். இந்தியாவின் வடபாகம் இந்துஸ்தானம் எனப்படும். தென்பாகத்தைத் தேன் இந்தியா என்று வழங்குவார்கள். இந்துஸ்தானத்தில் இருப்பவர் இந்துஸ்தானி, இந்தி, வங்காளம் முதலிய பாஷைகளைப் பேசுகிறார்கள். தென் இந்தியாவில் இருப்போர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகளைப் பேசுகிறார்கள்.

நமது இந்தியாவை ஜார்ஜ் மன்னர் ஆளுகிறுர். அவரது இராஜ்யத்திற்கு நமது நாடே நடு நாயகம்.

---

25. தீபாவளி

இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகை களுள் தீபாவளி ஒன்று. தீபாவளி என்ருல் 'தீபங்களின் வரிசை' என்பது பொருள். அது ஐப்பசி மாதம் கிருஷ்ண பக்ஷம் சதுர்த்தசி அன்று வரும். தீபாவளிப் பண்டிகை ஏற்பட்ட காரணம் புராணத்தில் பின் வருமாறு சொல்லப்பட்டிருக் கிறது:—

நரகாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவன் மிகுந்த பலம் உள்ளவன். அவன் கர்வ மடைந்து, தேவர்களையும் மனிதர்களையும் வருத்தி வந்தான். அதற்காகத் திருமால் அவனைக் கொன்ருர். அந்தத் தினம் ஐப்பசி மாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி திதி. அசுரன் இறப்ப தற்கு முன்பு கடவுளை நோக்கி, "சுவாமி! தங்க ளிடமிருந்து ஒரு வரம் வேண்டுகிறேன். தங்கள் கையினுல் அடியேனுக்கு இப்போது மரணம் நேர்ந்து நல்ல கதி உண்டாகப் போகிறது. இந்தத் தினத்தை யாவரும் கொண்டாடும்படி

செய்யவேண்டும். ஐப்பசி மாதம் கிருஷ்ண பக்ஷம் சதுர்த்தசி கூடின விடியற்காலையில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்தவர்களுக்குக் கங்கையில் ஸ்நானம் செய்த பலன் உண்டாக வேண்டும்" என்று பிரார்த்தித்தான். கடவுளும் அதற்கு இசைந்து, "அப்படியே ஆகட்டும்" என்று அருளினர். அது முதல் அந்தத் திதிக்கு "நரக சதுர்த்தசி" என்று பெயர் உண்டாயிற்று.

அவ்வண்ணமே பிரதி வருஷமும் இந்துக்கள் அன்று அதிகாலையில் எழுந்து, மங்களகரமாக எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து, புதிய ஆடை உடுக்கின்றனர். அப்பொழுது அவர்கள் தீபம் ஏற்றிப் பகவானைப் பூஜை செய்து, பலகாரங்களைக் கடவுளுக்கு நைவேத்யம் செய்து சாப்பிடுகிறார்கள். வட இந்தியாவிலுள்ள இந்துக்கள், அன்று வீடு முழுமையும் விளக்கேற்றி அலங்கரிப்பார்கள்; இலைத் தொன்னைகளில் நெய் விளக்கேற்றி ஆற்றில் விடுவார்கள். சிறு பிள்ளைகள் சினவெடி, ஆகாச பாணம் முதலியவைகளை விட்டுக் களிப்படைவார்கள்.

அன்று இந்துக்களுக்கு ஒரு பெரிய பண்டிகைத் தினம். பண்டிகை கொண்டாடுவோர் உறவினர்களையும் நண்பர்களையும் விருந்துக்கு அழைத்து மகிழ்வார்கள்.

26. நிலப் பாகங்கள்

மனிதர்கள் வசிக்கும் இடத்திற்கு வீடு என்று பெயர். வீடு மேடான இடத்தில் கட்டப்பட வேண்டும்; காற்று, தாராளமாய் உட்புகும்படிக்கும் இருத்தல் வேண்டும். வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அனேக வீடுகள் வரிசையாகக் காணப்பட்டால் அதற்குத் தெரு அல்லது வீதி என்று பெயர். ஒன்றுக்கு ஒன்று எதிர் முகமாய், இரண்டு பக்கங்களிலும் வீடுகள் அமைந்த வீதி அழகாயிருக்கும். வீதிகள் விசாலமாகவும் சுத்தமாகவும் இருத்தல் வேண்டும்.

நாலைந்து தெருக்கள் இருக்கும் இடத்திற்குக் கிராமம் என்றுபெயர். சில கிராமங்கள் பெரியனவாயும், பல தெருக்கள் உள்ளனவாயும் இருக்கும். கிராமங்களிலுள்ள வீடுகளில், சில ஓட்டு வீடுகளாகவும், சில கூரை வீடுகளாகவும் இருக்கும். மச்சு வீடுகள் கிராமங்களில் அருமையாகக் காணப்படும். கிராமத்திற்கு அதிகாரி கிராம முனிஸீப் என்பவர்.

அனேக கிராமங்கள் சேர்ந்தது தாலுக்கா எனப்படும். தாலுக்காவின் முக்கியமான இடத்தில் யூனியன் அல்லது முனிசிபாலிடி ஆபீஸ், தாசில்தார் ஆபீஸ், உயர்தரப் பாடசாலை, வைத்திய சாலை

முதலியபவைகள் இருக்கும். அந்தந்தத் தாலுக்காவின் அதிகாரியாகிய தாசில்தார் அவ்விடம் வசிப்பார்.

இப்படி அனேக தாலுக்காக்கள் சேர்ந்தது ஜில்லாவாகும். ஜில்லா அதிகாரிக்குக் கலெக்டர் என்று பெயர். அனேகமாய், ஜில்லாவின் முக்கியமான இடங்களில், காலேஜும் நியாயஸ்தலங்கள் முதலிய ஆபீஸுகளும் இருக்கின்றன.

நாம் வசிக்கும் சென்னை இராஜதானியில் அனேக ஜில்லாக்கள் இருக்கின்றன. இராஜத்தானியின் அதிகாரிக்குக் கவர்னர் என்று பெயர். நமது இராஜதானியின் கவர்னர் சென்னையில் வசிக்கிறார். சென்னையில் ஹைகோர்ட்டு, காலேஜுகள், ஸர்வ கலாசாலை, கண்காட்சிச் சாலை முதலியவைகள் இருக்கின்றன.

நமது இந்தியா தேசத்தில் அனேக இராஜதானிகள் இருக்கின்றன.

27 கண்ணும் பூச்சி

இராமன் - ஜகதீசா! நேற்று மாலை என் அண்ணன் படிக்கும் பள்ளிக்கூடம் போயிருந்தேன். அப்பொழுது அவ்வகுப்புக்கு விளையாட்டு நேரம். புதிய விளையாட்டு ஒன்றை அவன் உபாத்தியாயர் கற்பித்துக்கொண்டிருந்தார். அது மிகவும் வேடிக்கையா யிருந்தது.

ஜகதீசன்—அதென்ன விளையாட்டு?

இரா.—கட்டுக் கண்ணும் பூச்சி விளையாட்டாம்.

ஜ.—அதை விளையாடுவது எப்படி? தெளிவாகச் சொல்.

இரா.—வட்டமான ஒரு பெரிய கோடு கிழித்து, அந்த வட்டத்திற்குள் பிள்ளைகளைச் சற்று

விலக்கமாக நிற்கவைக்கவேண்டும். ஆனால் பிள்ளைகள் எல்லோரும் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்களாகவே இருக்கவேண்டும். உபாத்தியாயர் ஒரு பையனுடைய கண்களைக் கைக் குட்டையால் இறுகக் கட்டி விடுவார். கட்டிக்கொண்ட சிறுவன் கைகளால் துழாவிக் கொண்டேபோய் ஒருவனைப் பிடிப்பான். பிறகு அவனைத் தடவிப் பார்த்தும், அவனுடைய உடையினலோ தொனியினலோ ஏதேனும் ஒரு அடையாளத்தைக் கொண்டு உணர்ந்தும், அவன் பெயரைச் சொல்லவேண்டும்.

ஐ.—இது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஆனாலும், அகப்பட்டவன் பெயரைச் சொல்வது கஷ்டமில்லையா ?

இரா.—அதற்காகத்தான் அவனோடு கூடப் பழகின பிள்ளைகள் இந்த விளையாட்டில் சேரவேண்டும் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன்.

ஐ.—இருந்தாலும் அதை ஞாபகம் வைத்துக் கொண்டு அறிவது கஷ்டம் அல்லவா ?

இரா.—அதுதான் இந்த விளையாட்டின் விசேஷம். அதனல் யோசனையும், ஞாபக சக்தியும் விருத்தி யடைகின்றன அன்றோ ?

ஐ.—அவன் இன்னன் என்பதை ஊகித்து அறிந்துகொண்டு, அவன் பெயரையும் சரியாய்ச் சொல்லி விட்டால் விளையாட்டு முடிந்துவிட்டதா ?

இரா.—ஆமாம்; முடிந்துவிட்டது. அதன் மேல், உபாத்தியாயர் அகப்பட்டவன் கண்களைக் கட்டி, முன்போலவே மறுபடியும் விளையாடச் செய்தார்.

ஜ.—சரிதான்; என் அக்காள் தனது தோழி களுடன் கண்ணும் பூச்சி விளையாட்டு என்று ஒன்று விளையாடுகிருள். அது வேறு விதமாய் இருக்கிறதே!

இரா.—அப்படியா! அது எப்படி?

ஜ.—அவள் ஒரு பெண்ணின் கண்களைக் கையால் மூடிக்கொண்டு பாட்டுப் பாடுகிருள். அப்போது மற்றப் பெண்கள் எல்லோரும் நாலா பக்கங்களிலும் ஓடிப்போய் ஒளிந்துகொள்ளு கிருர்கள். பிறகு அவள் அப்பெண்ணின் கண் களைத் திறந்து விட்டு 'யாரையாவது கண்டு பிடித்து அழைத்து வா' என்கிருள்.

இரா.—ஓ ஹோ! அந்த விளையாட்டா? அதுவும் எனக்குத் தெரியும். ஒளிந்து கொண்ட வர்கள் ஓடிப்போய் உன் அக்காளைத் தொட்டு விட வேண்டும். தொட்டு விட்ட பெண்ணைப் பிடிக்கக் கூடாது. தொடாத பெண்களாகப் பார்த்து, அவர்களைப் பிடிக்க முயலவேண்டும். அகப்பட்ட பெண் திரும்பவும் கண்களைப் பொத்திக்கொண்டு

முன்போல் ஒருத்தியைக் கண்டு பிடிக்கவேண்டும். இது தானே.

ஜ.—ஆமாம். ஆமாம்.

இரா.—இந்த விளையாட்டிற்குச் 'சாதாரணக் கண்ணும் பூச்சி விளையாட்டு' என்று பெயர். நான் முதலில் சொன்னது 'கட்டுக் கண்ணும் பூச்சி விளையாட்டு'.

ஜ.—ஆமாம். முன்னால் நீ சொன்ன விளையாட்டு நன்றாகத்தான் இருக்கிறது. அந்த விளையாட்டை நாமும் சிநேகிதர்களைச் சேர்த்துக் கொண்டு தெருவில் விளையாடலாம் வா.

---

28. பிரயாணம் செய்தல்

பிரயாணம் செய்கிறவர்களில், சிலர் மாட்டு வண்டிகளிலும், சிலர் குதிரை வண்டிகளிலும் செல்லுகிறார்கள் என்று இரண்டாம் பாட புத்தகத்தில் படித்தோம் அல்லவா? அவைகள் தவிர இன்னும் அனேக விதமான வண்டிகளும் உண்டு.

"கோச்" வண்டியும் குதிரை வண்டிகளில் ஒன்றுதான். இதில் சில வண்டிகளுக்கு ஒற்றைக் குதிரையும், சில வண்டிகளுக்கு இரட்டைக் குதிரைகளும், சிலவற்றிற்கு நான்கு குதிரைகளும் கட்டுவது உண்டு.



கோச் வண்டிகளுக்குச் சக்கரங்கள் நான்கு. அவை களில் பின் சக்கரங்களைக் காட்டிலும் முன் சக்கரங் கள் சிறியவை.

இது ஒரு ஸைகிள் வண்டி. இதற்கு முன்னே ஒரு சக்கரமும், பின்னே ஒரு சக்கரமும் இருக்கின் றன. சக்கரங்களைச் சுற்றிலும் ரப்பார்க் குழாய் இருக்கிறது. அதில் நிரம்பக் காற்றைச் செலுத்திவைக்க வேண்டும். கால்களினால் சுழற்றித் தள்ளுவதனாலேயே வண்டி போகின்றது. இவ்வித வண்டிகளுள் மூன்று சக்கர வண்டிகளும் உண்டு. சிறு குழந்தைகள் வேடிக்கையாக முச்சக்கர வண்டிகளில் செல்வார் கள். ஸைகிள்களில், மோட்டார் ஸைகிளும் உண்டு. அது 'பெட்ரோலியம்' என்னும் எண் ணெயின் உதவியால் ஓடுகிறது.

எண்ணெய் உதவியினால் போகிற வண்டி மற் றொன்று உண்டு. அதற்கு 'மோட் டார் வண்டி 'என்று பெயர். இந்த வண்டிக்கு நான்கு சக்கரங்கள் இருக்கின்றன. இச்சக்கரங்களைச் சுற்றிலும் ரப்பார்க் குழாய் உண்டு.

இவைகள் பருமனாயும் உறுதியாயும் இருக்கின்றன. அக்குழாயில் காற்றைச் செலுத்தி ஓட்டுவார்கள். அது வெகு வேகமாய்ப் போகும்.

இதோ தெரிவது ஒரு ரயில் வண்டித் தொடர். அது நீராவியின் உதவியால் ஓடுகிறது. இந்த வண்டிகள் தரையில் ஓட மாட்டா. இவைகள் ஓடுவதற்கு இருப்புப் பாதைகள் வேண்டும். ஒரு வண்டித் தொடரில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் ஏறலாம்.

சாமான்கள் ஏற்றிக்கொண்டு போவதற்கென்று தனி வண்டித்தொடர் ஒன்று உண்டு. அதற்குக் "கூட்ஸ் வண்டி" என்று பெயர். மெயில் வண்டியில் தபால் போகும். இஞ்சின் முழுவதும் இரும்பினால் ஆனது. ஒவ்வொரு வண்டியிலும் கார்டுக்கு என்று தனியான இடம் ஒன்று உண்டு.

டிராம் வண்டியும் தண்டவாளத்தின் மேலே தான் ஓடும். வண்டி செல்வதற்கு வேண்டிய மின்சார சக்தி, வண்டியின் மேலே இருக்கும் கம்பியின் வழியாக வருகிறது. இவ்வண்டிகள் சென்னை,

பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் ஏராளமாக ஓடுகின்றன.

29. விளக்குகள்



இது ஒரு மண் அகல். இதில் பஞ்சுத் திரியைப் போட்டு நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், கடலையெண்ணெய் முதலிய எண்ணெய்களை ஊற்றி விளக்கு எரிக்கலாம். இம்மாதிரியான விளக்குகளைக் கார்த்திகை தினத்தன்று ஒவ்வொரு வீட்டிலும் காணலாம். இவ்வகல் பித்தளை, வெண்கலம் முதலிய உலோகங்களாலும் செய்யப்படும்.

இது குத்து விளக்கு எனப்படும். இது வெண்கலத்தால் செய்யப்பட்டது. இதன் உச்சியில் உள்ள கமலம் போன்ற கைப்பிடியின் கீழ், குழிந்த வட்டமான இடம் ஒன்று இருக்கிறது. அதில் எண்ணெயை ஊற்றி விளக்கு ஏற்றலாம். அதில் ஐந்து மூக்குகள் உண்டு. ஒரே சமயத்தில் அவை எல்லாவற்றையும் ஏற்றினால் அழகாயிருக்கும். கலியாண வீடுகளிலும் கோயில்களிலும் இம்மாதிரியான விளக்குகள் அலங்காரமாயும் மங்களகரமாயும் விளங்குவதுண்டு.

இது மெழுகுவர்த்தி விளக்கென்று சொல்லப்படும். இதனுள் இருக்கும் குழாயில் மெழுகு வர்த்தியை வைத்து ஏற்றுவார்கள். அது எரிந்து கொண்டேவர, அதனுள் இருக்கும் 'ஸ்ப்ரிங் கம்பி' அதனைத் தூக்கி விட்டுக்கொண்டே வருகிறது. அதனால் அது ஒரே நிதானமாய் எரியும்.

இது ஒரு 'ஹரிகேன்' விளக்கு. இதைப் பெருங் காற்றிற் கொண்டு போனாலும், இது அணையாது. ஆகையால் இது இப்பெயர் பெற்றது. இதில் மண்ணெண்ணெயை ஊற்றி விளக்கு ஏற்றுவார்கள். மண்ணெண்ணெய் ஆங்கிலத்தில் 'கிரொஸின் ஆயில்' எனப்படும். மண்ணெண்ணெய் விளக்குகளில் பலவிதம் உண்டு. அவை மிகுந்த ஒளியைக் கொடுக்கும்.



மண்ணெண்ணெய் அயல் நாடுகளிலிருந்து நமக்குக் கிடைக்கிறது; சுலபத்தில் தீப்பற்றக் கூடியது; விலை குறைந்தது.

மண்ணெண்ணெய் விளக்கைவிட விளக்கெண்ணெய் விளக்கு, கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இது ஒரு ஆவி விளக்கு. ஆங்கிலத்தில் இது 'காஸ் லைட்' எனப் பெயர் பெறும். கலியாண காலங்களில் ஊர் கோலத்திற்கும் இன்னும் பலவற்றிற்கும் இது உபயோகப்படுகிறது. மண்ணெண்ணெயைப் போல் பூமியினின்று வெட்டி எடுக்கப்படும் 'பெட்ரோலியம்' என்னும் எண்ணெயின் ஆவியினுலேயே இது எரிகிறது. 'பெட்ரோலியம்' எண்ணெய் வெகு இலேசானது; எளிதில் தீப் பற்றக் கூடியது. இவ்விளக்கின் ஒளி வெகு தூரம் வீசும்.

இது மின்சார விளக்கு. இம்மாதிரியான விளக்குகளை இருப்புப் பாதை வண்டித் தொடரில் காணலாம். சென்னை முதலிய நகரங்களின் தெருக்களில் இராக் காலங்களில் இவ்விளக்குகள் எரிகின்றன. இவைகளும் மிகுந்த வெளிச்சத்தைக் கொடுக்கும். ஆனல் இவ்விளக்கின் ஒளியை வேண்டும்போது குறைத்துக்கொள்ளவும், அதிகமாக்கிக்கொள்ளவும் இயலாது. ஒரே மாதிரியாய் ஏற்றத் தாழ்வு இன்றியே இவை எரியும். இவ்விளக்கின் ஒளி நாளடைவில் கண்களைக் கெடுத்து விடும்.



30. படகுகளும் கப்பல்களும்

நாம் நிலத்தில் பிரயாணம் செய்வதாய் இருந்தால், காலினுல் நடந்தும், வண்டிகளில் ஏறியும் செல்லுகிறோம். ஆனல் கடலின் மீது அப்படிச் செல்ல முடியாது. ஜலத்தில் மிதக்கக் கூடிய பொருள்களின் உதவியினுலேயே நாம் கடலைக் கடக்கவேண்டும்.

இப்படத்தில் இரண்டு செம்படவர்கள் கடலில் கட்டுமரத்தில் செல்லுகிறுர்கள். அம்மரம் வெகு இலேசானது; தண்ணீரில் மிதக்கக் கூடியது. அது மூன்று கட்டைகளால் இணைக்கப்பட்டது. அதன் மேல் இரண்டொருவர் ஏறி உட்கார்ந்து நடுக்கடலில் மீன் பிடிக்கப் போவார்கள். அவர்

கள் ஒவ்வொருவரிடமும் ஒரு துடுப்பு இருக்கும்; அதனால் அவர்கள் கட்டு மரத்தைத் தள்ளிக் கொண்டு போவார்கள்.

படத்தில் படகைப் பாருங்கள். படகுகளில் சில சிறியவைகளாகவும், சில பெரியவைகளாகவும் இருக்கும். படகுகள் கடலில் வெகுதூரம் போக மாட்டா. அவை, சிறிய மூட்டைகளையும் சில ஜனங்களையும் ஏற்றிக்கொண்டு போவதற்கும், ஆழமான ஆறுகளைக் கடப்பதற்கும் மாத்திரமே உபயோகப் படுகின்றன.

படகில் கட்டியிருக்கிற பாயைப் பார். அது அழுத்தமான நூல்களால் நெய்யப்பட்டது. காற்று பாய்களைத் தாக்கப் படகுகள் ஓடும். படகு ஓட்டிகள் துடுப்புக்களையும் கோல்களையும் வைத்துக் கொண்டு அவற்றைத் தள்ளுவார்கள்.

படத்தில் பெரியதாய்க் காணப்படுகிறது ஒரு இரும்புக் கப்பல். நீராவியின் உதவியால் அது செல்லுகிறது. அதில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஏறலாம். நீராவிக் கப்பலில் பிரயாணம் செய்வது ஆனந்தமாய் இருக்கும். அது சமுத்திரங்களில் வேகமாய்ச் செல்லும். போர் வீரர்கள் கப்பலில் ஏறிக்கொண்டு நடுக் கடலில் சண்டை செய்வதுண்டு. அனேக நாடுகள் சமுத்திரத்திற்கு அப்பால்தான் இருக்கின்றன. உனக்குக் கப்பலில் பிரயாணம் செய்ய விருப்பமா ?



31. தைரியமுள்ள சிறுவன்

ஓர் ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் அந்த ஊரில், ரயில்வே ஸ்டேஷனில் வேலை செய்யும் கூலி ஆட்களில் ஒருவனுடைய மகன். அச் சிறுவன் எப்பொழுதும் தனது தகப்பனுடனே இருந்து, அவன் செய்யும் வேலைகளை எல்லாம் கவனித்துக் கொண்டே வருவான். ரயில் வேலைக்காரர், வண்டித் தொடர்கள் வரும் பொழுதும் போகும் பொழுதும் கொடிகளைக் காண்பிப்பார்கள். அப்பொழுதெல்லாம் அதை அச்சிறுவன் உற்றுநோக்கி வருவான்.

ஒரு நாள் காலையில் அப்பையன் தனியாக அடுத்த ஊருக்குப் போகப் புறப்பட்டான். இருப்

புப் பாதையின் ஓரமாகவே அவன் அவ்வூருக்குப் போய்க்கொண்டிருந்தான். ஓரிடத்தில் ரயில் தண்டவாளம் ஒன்று, தன் இடத்தை விட்டு விலகியிருந்தது. அதைக் கண்டவுடனே பையன் ஒன்றும் தோன்ருமல் அங்கேயே நின்றுவிட்டான். “இந்தத் தண்டவாளத்தின்மேல் ரயில் வண்டி வந்தால் நிச்சயம் அபாயம் நேரிடுமே! அதனுல் பல ஜனங்களும் பொருள்களும் சேதம் அடையுமே” என்று நினைத்தான்.

இப்படி யோசித்துக்கொண்டிருக்கையில் வண்டி வரும் சப்தம் அவன் காதில் விழுந்தது. அந்த வண்டியை எவ்விதத்திலாவது கொஞ்ச தூரத்திலேயே நிறுத்திவிட வேண்டுமென்று எண்ணினுன். அப்பொழுது அவனுக்குத் தன் தகப்பனுர் வண்டியை நிறுத்தச் சிவப்புக் கொடி காட்டும் ஞாபகம் வந்தது. ஆனுல் அதுபோன்ற கொடி அச்சமயம் அவனிடம் இல்லாததால் ஒரு யுக்தி செய்தான். தன் அரையில் கட்டியிருந்த சிவப்புத் துணியை ஒரு கொம்பில் கட்டி, வண்டிக்கு எதிரில் உயர்த்திப் பிடித்துக்கொண்டு நின்ருன்.

வண்டியோட்டி சற்று நிதானித்து, “யாரோ ஒருவன் இருப்புப்பாதையில் நிற்கிருன்; அவன் விலகிச் செல்லட்டும்” என்று அனேக தடவை ஊதினுன். அதற்கும் அப்பையன் நகர வில்லை.

ஆனால் வண்டியை மட்டும் அவன் மெதுவாகச் செலுத்தி வந்தான்; அப்படிச் செலுத்தும் பொழுதும் பல முறை ஊதினான். அப்பொழுதும் அச்சிறுவன் அசையவில்லை. "என்ன விசேஷம் பார்ப்போம்!" என்று வண்டியோட்டி, ரயில் வண்டியை நிறுத்தி விட்டுப் பையனிடம் வந்தான். அப்போது வண்டியில் பிரயாணம் செய்பவர் சிலரும் அவனிடம் வந்தார்கள்.

வந்தவுடன் சிறுவன், தண்டவாளம் விலகி யிருப்பதைக் காண்பித்தான். வண்டி யோட்டியும் பிறரும் "ஆஹா! இவ்வளவு சிறு பையன் கொஞ் சங்கூடப் பயப்பட வில்லையே! இவன் தன் னுடைய அபாயத்தைச் சிறிதும் எண்ணாமல் பிறருடைய நன்மையை அல்லவா நாடி நின் ருன்! இம்மாதிரியான யுக்தி இவனுக்கு எவ்விதம் தோன்றிற்று? இவனுடைய புத்தியே புத்தி" என்று ஆச்சரியப்பட்டார்கள்.

பிறகு தண்டவாளத்தைச் சரிப்படுத்தி வண்டி யைச் செலுத்தினான் வண்டியோட்டி. பிரயாணி களில் சிலர் இச்சிறுவனுடைய தைரியத்தையும் உபகாரச்செய்கையையும் ரயில்வே மேல் அதிகாரி களுக்குத் தெரியப் படுத்தினார்கள். அதிகாரிகள் அச்சிறுவனுடைய குணத்துக்கு மிகவும் மெச்சி, அவனுக்குத் தகுந்த வெகுமதி அளித்தார்கள்.

32. பழமொழிகள்

1. அமரிக்கை ஆயிரம் பொன்.
2. அறிவுடையாரை அடுத்தால் போதும்.
3. ஆசை வெட்கம் அறியாது.
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
5. ஏழைப் பேச்சு அம்பலம் ஏறாது.
6. கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்.
7. கற்றுக்கொடுத்த பேச்சும் கட்டிக் கொடுத்த சாதமும் துணையாகா.
8. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
9. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல.
10. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.
11. கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியா?
12. செடியில் வளையாதது மரமாய் வளையாது.
13. சென்ற காரியத்தைப் பார்த்து, வரும் காரியத்தை அறி.
14. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
15. நாவிற் பிறக்கும் நன்மையும் தீமையும்.
16. நிறைகுடம் நீர் தளும்பாது.
17. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்.
18. பிறர் பொருளை இச்சிப்பவன் தன் பொருளை இழப்பான்.
19. புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?
20. போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்.

33. ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. ஊக்கமது கைவிடேல்.
6. எண்ணெழுத்து இகழேல்.
7. ஏற்பது இகழ்ச்சி.
8. ஐயம் இட்டுண்.
9. ஒதுவது ஒழியேல்.
10. ஔவியம் பேசேல்.
11. கண்டொன்று சொல்லேல்.
12. சனி நீராடு.
13. இணக்க மறிந்து இணங்கு.
14. தந்தை தாய்ப் பேண்.
15. நன்றி மறவேல்.
16. பருவத்தே பயிர்செய்.
17. வஞ்சகம் பேசேல்.
18. இளமையிற் கல்.
19. அனந்த லாடேல்.
20. கீழ்மை அகற்று.
21. குணமது கைவிடேல்.
22. கூடிப் பிரியேல்.
23. கெடுப்ப தொழி.
24. கேள்வி முயல்.

25. சான்ருேர் இனத்திரு.
26. சூது விரும்பேல்.
27. செய்வன திருந்தச் செய்.
28. சேரிடம் அறிந்து சேர்.
29. சோம்பித் திரியேல்.
30. தீவினை அகற்று.
31. தூக்கி வினை செய்.
32. தெய்வம் இகழேல்.
33. தேசத்தோடு ஒத்து வாழ்.
34. நன்மை கடைப்பிடி.
35. நீர் விளையாடேல்.
36. நூல் பல கல்.
37. நெற்பயிர் விளை.
38 நோய்க்கு இடங் கொடேல்.
39. பிழைபடச் சொல்லேல்.
40. பெரியாரைத் துணைக் கொள்.
41. பேதைமை அகற்று.
42. பொருள்தனைப் போற்றி வாழ்.
43. மனம் தடுமாறேல்.
44. மாற்ருனுக்கு இடங் கொடேல்.
45. மீதூண் விரும்பேல்.
46. மூர்க்கரோடு இணங்கேல்.
47. மேன்மக்கள் சொற் கேள்.
48. வித்தை விரும்பு.
49. உத்தமனய் இரு.
50. ஊருடன் கூடி வாழ்.

34. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
3. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
4. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
5. ஏவா மக்கள் மூவா மருந்து.
6. ஐயம் புகினும் செய்வன செய்.
7, கிட்டாதாயின் வெட்டென மற.
8. கீழோ ராயினும் தாழ உரை.
9. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
10, சீரைத் தேடின் ஏரைத் தேடு.
11. தந்தை சொல் மிக்க மந்திர மில்லை.
12. தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.
13. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
14. தீராக் கோபம் போராய் முடியும்.
15. தோழனோடும் ஏழைமை பேசேல்.
16. நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.
17. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
18. நோன்பு என்பது கொன்று தின்னாமை.
19. பாலோடாயினும் காலம் அறிந்துண்.
20. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
21. மருந்தேயாயினும் விருந்தோடு உண்.
22. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
23. வளவனாயினும் அளவறிந்து அழித்துண்.
24. வானஞ் சுருங்கின் தானம் சுருங்கும்.

35. ஆத்திசூடி

(பொருள் விளக்கம்)

1. தருமம் செய்ய ஆசைப்படு.
2. கோபத்தை அடக்கவேண்டும்.
3. (இரப்போர்க்குக்) கொடுக்கக் கூடியதை ஒளியாமல் கொடு.
4. (ஒருவர் இரப்போர்க்குக்) கொடுப்பதைத் தடுக்காதே.
5. முயற்சியை விட்டு விடாதே.
6. கணக்கையும் இலக்கணத்தையும் அலட்சியம் செய்யாமல் கற்றுக்கொள்.
7. பிச்சை எடுப்பது இழிவான காரியம்.
8. (இரப்போர்க்குக்) கொடுத்து நீயும் சாப்பிடு.
9. (அறிவை வளர்க்கும் நூல்களைப்) படிப்பதை எப்போதும் விடாதே. (இறக்கும் வரையில் படித்துக்கொண்டே இருக்கவேண்டும்.)
10. பொறாமையான பேச்சுக்களைப் பேசாதே.
11. (ஒன்றைப்) பார்த்து மற்றொன்றைச் சொல்லாதே.
12. சனிக்கிழமை தோறும் (எண்ணெய் தேய்த்துக்கொண்டு) ஸ்நானம் செய்.
13. ஒருவன் குணத்தை ஆராய்ந்து பார்த்துச் சிநேகம் செய்.
14. தகப்பனையும் தாயையும் காப்பாற்று.
15. (ஒருவர் செய்த) உபகாரத்தை மறக்காதே.
16. விளையும் காலத்தை அறிந்து பயிரிடு. (காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்.)
17. கபடப் பேச்சுக்களைப் பேசாதே. (மனத்தில் ஒன்றும் பேச்சில் ஒன்றுமாகப் பேசலாகாது.)
18. இளமைப் பிராயத்திலேயே படி.
19. அதிகமாகத் தூங்காதே.
20. இழிவான காரியங்களைச் செய்யாதொழி.
21. நற்குணமுள்ளவைகளை விட்டுவிடாதே.
22. நல்லவரோடு சிநேகம் செய்து, பின்பு பிரியாதே.
23. பிறருக்குக் கெடுதி செய்வதை விட்டுவிடு.
24. பெரியோர் கூறும் நூற்பொருளைக் கேட்பதற்கு முயற்சி செய்.
25. பெரியோர் கூட்டத்தில் எப்போதும் சேர்ந்திரு.
26. சூதாடுவதற்கு ஆசைப்படாதே.
27. செய்யும் காரியங்களைச் செவ்வையாகச் செய்.

28. சினேகம் செய்யும் இடத்தைத் தெரிந்துகொண்டு சினேகம் செய்.
29. (யாதொரு முயற்சியும் செய்யாமல்) சோம்பேறியாகத் திரியாதே.
30. பாவச் செய்கைகளைச் செய்யா தொழி.
31. ஆராய்ந்து பார்த்து ஒரு தொழிலைச் செய்.
32. கடவுளை நிந்திக்காதே.
33. நீ வசிக்கும் தேசத்தில் உள்ள ஜனங்களுடன் ஒற்றுமையுடன் இரு.
34. நல்ல காரியங்களையே உறுதியாகக் கொள்.
35. ஆழமுள்ள ஜலத்தில் நீந்தி விளையாடாதே.
36. நல்லறிவை விருத்தி செய்யக் கூடிய புத்தகங்களைப் படி.
37. நெல்லைப் பயிரிட்டு ஜீவனம் செய்.
38. வியாதிகளை வளர விடாதே.
39. குற்றம் உண்டாகும்படி பேசாதே.
40. பெரியோரைத் துணையாகக் கொள். (எந்தக் காரியத்தையும் பெரியோரை கேட்டுச் செய்.)
41. மூடத்தனத்தை நீக்கு.
42. செல்வத்தை நாசம் செய்யாமல் காப்பாற்றி வாழ்.
43. (எவ்வித கஷ்டம் வந்தபோதிலும்) மனம் கலங்காதே.
44. விரோதிக்கு இடங் கொடாதே.
45. (அளவுக்கு) அதிகமான சாப்பாட்டை விரும்பாதே.
46. மூடர்களோடு சினேகம் செய்யாதே.
47. பெரியோர் சொல்லைக் கேட்டு அதன்படி நட.
48. (மேன் மேலும்) படிக்க ஆசைப்படு.
49. (நற்குண நற் செய்கைகளில்) மேலானவனாய் இரு.
50. ஊராருடனே ஒற்றுமையாய் இருந்து வாழ்.

---

36. கொன்றை வேந்தன்

(பொருள் விளக்கம்)

1. தாயும் தந்தையுமே ஒருவனுக்கு முதல் தெய்வமாவர்.
2. கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் நல்லது.
3. ஒருவன் தான் வசிக்கும் ஊராருடன் விரோதித்தால், அவன் தன வமிசத்தோடு கெடுவான்.

புதுமுறைத் தமிழ் மூன்றும் பாடம்

4. கணக்கும் இலக்கணமும் ஒருவனுக்குக் கண்கள்போல் முக்கியமானவை. (அவைகளை அவசியம் கற்கவேண்டும்.)
5. பெற்றோர் ஒரு தொழிலைச் செய்யக் கட்டளையிடும் முன்னே அவர்கள் குறிப்பறிந்து செய்யும் பிள்ளைகள் தேவாமிர்தத்துக்கு ஒப்பாவார்.
6. பிச்சை எடுத்தபோதிலும் செய்யத் தகுந்த காரியங்களை விடாமல் செய்.
7. (ஆசைப்பட்ட பொருள்) கிடைக்கா விட்டால் அதனைச் சீக்கிரம் மறந்து விடு.
8. (கேட்பவர் உனக்குக்) கீழ்ப்பட்டவரா யிருந்தாலும் அவர்களிடம் பணிவாகப் பேசு.
9. கையில் இருக்கும் செல்வப் பொருளைக் காட்டிலும், கல்விப் பொருளே அழியாததாகும்.
10. மேன்மையைத் தேடவேண்டுமானால் பயிர்த்தொழிலைத் தேடிக்கொள்.
11. தகப்பனுருடைய சொல் மந்திரத்தினும் உயர்ந்தது.
12. தாயாரைக் காட்டிலும் சிறப்புப் பொருந்திய கோயில் எதுவும் இல்லை. (அவள் தெய்வத்தினும் சிறந்தவள்.)
13. அலை வீசுகிற கடலைக் கப்பலேறி (ப்பரதேசங்களுக்குச்) சென்றுவது செல்வத்தைச் சம்பாதி.
14. நீங்காக கோபம் கடைசியில் சண்டையாய் முடியும்.
15. சினேகனிடத்தில்கூட உன் சிறுமையைச் சொல்லாதே.
16. நல்ல சினேகம் அல்லாதது (துஷ்ட சினேகம்) ஒருவனுக்குத் துன்பத்தை உண்டாக்கும்.
17. சிறிய காரியத்தையும் யோசித்துச் செய்.
18. யாதொரு பிராணிகளையும் கொன்று தின்னுமலிருத்தலே விரதம் என்று சொல்லக் கூடியது.
19. பாலே சாப்பிடுவதா யிருந்தாலும் (பசிக்கும்) காலம் அறிந்து சாப்பிடு.
20. கெட்ட காரியங்கள் எல்லாவற்றையும் நீக்கு.
21. தேவாமிர்தமே நீ உண்பதாயிருந்தாலும் விருந்தினர்க்கு இட்டுச் சாப்பிடு.
22. பெரியோர் கூறும் வார்த்தை தேவாமிர்தம்போல் இனிமை தரும்.
23. பெருஞ் செல்வனு யிருந்தபோதிலும் பொருளின் அளவை அறிந்து செலவழித்துச் சாப்பிடு. (வளவன்—சோழ அரசன்.)
24. மழை பெய்யாமல் குறைந்தால் தானம் முதலியவைகள் குறையும்.

172932

Books by the Same Author

புதுமுறைத் தமிழ் முதற் பாடம் ... 0 2

,, ,, இரண்டாம் பாடம் ... 0 3

,, ,, மூன்றும் பாடம் ... 0 3

,, ,, நான்காம் பாடம் ... அச்

,, ,, ஐந்தாம் பாடம் ... அ

Published by—

V. S. SUBRAMANYA AYYAR,

8, Venkatayyar Street.

George Town, M

Vest & Co., Madras.